நல்ல நாடகங்கள்

டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

B.Ed; Ph.D; D.Litt; D.Ed; FUWAI

நல்ல
நாடகங்கள்

பல்கலைப் பேரறிஞர்
தேசிய விருது பெற்ற பேராசிரியர்
டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.d. D.Litt. D.Ed. FUWAI

சாந்திமலர் பதிப்பகம்,
8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி. நகர். சென்னை 17
☎ 4332696

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	:	**நல்ல நாடகங்கள்**
மொழி	:	தமிழ்
பொருள்	:	தமிழ் இலக்கிய நாடகங்கள்
ஆசிரியர் பெயர்	:	**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**
பதிப்பு	:	மார்ச் 1999
நூலின் அளவு	:	கிரவுன்
அச்சு	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	104
நூல் கட்டுமானம்	:	அட்டைக் கட்டு
விலை	:	**ரூ. 20-00**
உரிமை	:	ஆசிரியருக்கு
தாள்	:	வெள்ளைத்தாள்
வெளியிட்டோர்	:	சாந்தி மலர் பதிப்பகம், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி.நகர். சென்னை - 600 017 ☎ 4332696
அச்சிட்டோர்	:	கிரேஸ் பிரிண்டர்ஸ், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி. நகர், சென்னை- 600 017. ☎ 4332696

முன்னுரை

நல்ல நாடகங்கள் என்று இந்த நூலுக்குப் பெயர் சூட்டியிருக்கிறேன்.

நாடகம் என்பது நல்ல கருத்துக்களை, நெஞ்சிலே ஏற்றி, நிலை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிற அற்புதமான கலை நயத்தோடு கூடிய அரிய முயற்சியாகும்.

படிப்பதற்கேற்ற நாடகம்; நடிப்பதற்கேற்ற நாடகம் என இரண்டு வகையான நாடக நூல்கள் உண்டு.

படிக்கும் போது சுவையாகவும், நடிக்கும் போது சுகமாகவும் அமையக் கூடிய நாடகங்களே, ஜனரஞ்சகமாக அமையும் என்பார்கள்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள வித்யா மந்திர் என்ற பள்ளியிலே, நான் பணியாற்றிய போது, பள்ளி விழாக்களுக்காக எழுதப்பட்ட நாடகங்கள்.

ஆங்கிலப் பள்ளியிலே, ஆங்கிலத்தில் தான் மாணவர்கள் பேசவேண்டும் என்ற சூழ்நிலையில், படித்த மாணவர்கள் எல்லோரும், நல்ல தமிழ் பேசிப்பழக வேண்டும் என்பதற்காக நல்ல தூய தமிழிலே எழுதப்பட்ட நாடகங்கள் தான் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

கற்றுக் கொண்ட மாணவர்கள், நன்றாக நடித்தார்கள் என்பது மட்டுமல்ல; இலக்கிய நயம் நிறைந்த வசனங்களை யெல்லாம் தெள்ளத் தெளிவாகப் பேசி சிறப்பாக நடித்தார்கள் என்பது தான், நல்ல நாடகங்களின் சிறப்பாக அமைந்திருந்தது.

இவ்வாறு, அரங்கேறிய நாடகங்கள், பிறகு சென்னை வானொலியிலும், சென்னைத் தொலைக்காட்சியிலும் நடிக்கப்பட்டு, மாணவ மாணவரிடையே பிரபலமாகின.

அதனைக் கண்டு மகிழ்ந்த ஆசிரிய பெருமக்கள், தாங்கள் பணியாற்றும் பள்ளிகளின் ஆண்டு விழாக்களிலும் அரங்கேற்றி மகிழ்ந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புறநானூறு, மகாபாரதம் போன்ற புகழ்பெற்ற காவியங்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்களில், அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், பாசம், பண்பு, பெருமிதம் போன்ற குணங்களை வளர்த்துக் கொள்ளக் கூடிய முறையில் எழுதப்பட்ட நல்ல வசனங்களைக் கொண்ட நல்ல நாடகங்கள் எனும் எனது நூல் பல பதிப்புகளில் வெளியாகி வந்தன.

மீண்டும் ஒரு புதிய பதிப்பு வெளி வருகிறது.

புதிய சமுதாயம் படைக்க் பாடுபடும் பெரியோர்கள், பண்பாளர்கள், இந்த நூலையும் ஏற்று, பயன்பெறச் செய்யும் பணியை மேற்கொண்டு உதவ வேண்டும் என்று விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

ஞானமலர் இல்லம்,
லில்லி பவனம்,
சென்னை - 17

அன்புடன்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா.

உள்ளே...

1. தெளிந்த நீர்! ... 6

2. பாரியின் பரிசு! ... 31

3. வெற்றி யாருக்கு? ... 49

4. தியாக மைந்தன்! ... 68

5. கண்ணன் வந்தான்! ... 85

1. தெளிந்த நீர்!

(புத்தர் வரலாறு)

சுத்தோதன மகாராஜா...புத்தரைப் பெற்றெடுத்த புண்ணியன். துறவறம் பூண்ட தன் மகனைப் பத்தாண்டுகள் பிரிந்திருந்த அவரின் உள்ளம் பாகாய் உருகிற்று.

அவரை அழைத்துவர, அவர் மேற்கொண்ட முயற்சியனைத்தும் தோல்வியையே தழுவிக் கொண்டன.

இறுதியிலே புத்தர் வர இசைந்தார். இனிக்கும் சேதிதான்.

தந்தையும் மகனும் அரண்மனைத் தலைவாசலிலே சந்திக்கின்றனர். எண்ணங்கள் அருவியாய் குதிக்கின்றன.

இச்சையோடு மகாராஜா வரவேற்கிறார்.

பிச்சையென மண்பாண்டத்தை நீட்டுகிறார் புத்தர்.

என்ன கொடுமையான நிலை?...

புத்தரின் மகன் ராகுலன் தன் தந்தையைப் பார்க்கிறான். பட்டத்து இளவரசன் புத்த சங்கத்தில் சேர ஆசைப்படுகிறான். புத்தருக்கோ தடை சொல்ல முடியாத இக்கட்டான நிலை. தந்தைக்கோ பரம்பரை பாழாய்ப் போகிறதே என்ற கவலை நிலை. கலக்க நிலை.

மூன்று தலைமுறையும்மோதிக் கொள்கிறது...

நீர் கலங்குகிறது! தெளிவு பெறுகிறதா?...

1. தெளிந்த நீர்

காட்சி 1

இடம் : அரண்மனையில் ஒரு அறை,

உள்ளே: சுத்தோதன மகாராஜா; அமைச்சர்; சேனாதிபதி.

(அமைச்சரும் சேனாதிபதியும் தலை குனிந்தபடி நின்று கொண்டிருக்க, மகாராஜா - சோகமும் கோபமும் கலந்த குரலில் பேசுகிறார்)

சுத்தோ: நான் நினைப்பது போல் தான் எதுவும் நடக்க வில்லை. என் ஆசையை நிறைவேற்ற இங்கு யாருக்குமே திறனில்லை. துணிவில்லை. நான் பெற்ற மகனை, என் ஆருயிர் மைந்தனை, அரண்மனைக்கு அழைத்து வாருங்கள் என்று ஆயிரம் பேரை அனுப்பினேன். ஆசையோடு வாயிலிலே காத்திருந்தேன். தூது போன அத்தனை பேரும் துறவு பூண்டு அங்கேயே தங்கி விட்டார்கள்.

ஆவலோடு என் அமைச்சரை அனுப்பினேன். அவர் கதியும் அதே கதிதான். போனவர் திரும்ப வில்லை. வரவும் விரும்பவில்லை.

என் மெய்காப்பாளன்! ... அவனையும் உண்மையாக நம்பி அனுப்பினேன். அவர்களை எல்லாம் நல்லவர்களாக்கி விட்டான்-- அந்த முட்டாள். இனி யாரை நம்புவேன்? எப்படி என் மகனை பார்ப்பேன். என் ஆசைகளைத் தீர்ப்பேன்!

சேனாதி: அரசே! துறவறம் பூண்டவர்களை நம்முடைய விருப்பத்திற்குக் கட்டுப் படுத்த முடியாது. எங்கள் முயற்சி இதுவரை வெற்றி பெறவில்லை என்று வருத்தத்துடன்...

மந்திரி: அரசே! தைரியத்தை இழக்க வேண்டாம். புத்தர் வருவார். நிச்சயம் நம் அரண்மனைக்கு வருவார்.

காட்சி தருவார். ஆனால், நமக்கு இன்னும் பொறுமை வேண்டும் அரசே!

சுத்தோ: பொறுமை?... அமைச்சரே! இன்னுமா பொறுமை? ஆசை மீறுகின்ற பொழுது...

மந்திரி: அறிவு தடுமாறும். அதைக் கட்டுப்படுத்தும் பொழுது...

சுத்தோ: பாசம் புயலெனக் கிளம்பும் அமைச்சரே! பாசம் புயலெனக் கிளம்பும். என் மார்பைத் தொட்டி லாக்கி, இந்த மடியைக் கட்டிலாக்கி வளர்த்தேன். சித்தார்த்தன் என்ற பெயரிட்டு செல்லமாக அழைத்தேன். ஆசைக்கு ஒரு மகன், இந்த அரசுக்குத் திருமகன், அவனைப் பெற்றவன் நான் - என்ற பேரானந்தத்தில் திளைத்தேன். களித்தேன். ஆனால்... ஆனால்...

இந்த மாபெரும் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்க இருந்த மகன், இன்று காட்டிலும், மேட்டிலும் துறவியாகத் திரிகிறான்: கூடே இல்லாத குருவியாக அலைகிறான். புரிகிறதா என் நிலைமை... தெரிகிறதா இந்தக் கொடுமை! என் இதயம் கடலாகக் குமுறுவது கேட்கிறதா? உமக்கெங்கே கேட்கப் போகிறது அமைச்சரே!...

மந்திரி: மன்னிக்க வேண்டும் சக்கரவர்த்திகளே! புத்திர பாசம் பொல்லாததுதான். இருந்தாலும், இன்றைய நிலையை நாம் சிறிது யோசித்துப் பார்க்கத்தான் வேண்டும். சித்தார்த்தராக இருந்தவர் புத்தராக மாறி, இந்தப் பூவுல

கத்தையே காக்கப் போய் விட்டார். என்ன செய்யலாம்? வெண்ணெய் ஆகி விட்ட பின் அது பாலாக மாற முடியாது வேந்தே?

சுத்தோ: உதாரணம் புரிகிறது? ஆனால் என் உள்ளத்திற்கு யார் புரிய வைப்பது? என் மகனை ஒரு முறை அழைத்து வாருங்கள் என்று ஆள் மேல் ஆள் அனுப்புகிறேன். எனக்குக் கிட்டாமல் போன மகன், இன்று-இன்னும் எட்டாத தூரத்திற்கே போய்க் கொண்டிருக்கிறான். அவனைக் காணாமலேயே நான் ஒரு வேளை....(வேதனை தாங்காமல், அங்கு இருக்கும் ஒரு ஆசனத்தில் அமர்கிறார். அமைச்சரும் சேனாதிபதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.)

சேனாதி: அரசே! கடைசி முயற்சி... நம் சித்தார்த்தரின் நெருங்கிய நண்பரும், சிறந்த அறிவாளியுமான உதாயி என்ற அந்தணரை தூது அனுப்பி யுள்ளோம்.

சுத்தோ: (ஏளனமாக) அவரும் துறவியாகி விட்டாரா?

சேனாதி: (தயக்கத்துடன்) ஆமாம்.

சுத்தோ: தெரிந்த கதை தானே! இதில் என்ன புதுமை இருக்கிறது என்று என்னிடம் கூற வந்தீர்கள்?

சேனாதி: துறவியாகி விட்டாலும், தன் முயற்சியில் வெற்றி பெற்று விடுவார் என்ற நம்பிக்கையான சேதி வந்திருக்கிறது.

சுத்தோ: (மனந்தளர்ந்த நிலையில்) ஓகோ!

மந்திரி: நம்பிக்கையை இழக்க வேண்டாம் வேந்தே! நாளையே நமக்கு நல்ல சேதி கிடைத்தாலும் கிடைக்கலாம்.

சுத்தோ: அதையும் பார்ப்போமே!

(மகாராஜா போகிறார்)

-திரை-

காட்சி 2

இடம் : கானகம்.

உள்ளே: புத்தர்... உதாயி

(புத்தர் வானத்தைப் பார்த்தவாறு நின்று கொண்டிருக்கிறார். அவர் பின்னால் நிற்கும் உதாயி பேசத் தொடங்குகிறார்.)

உதாயி: பார்க்கலாம் என்று தான் வந்தேன். பகவானைப் பார்த்ததும் நான் வந்த வேலையை மறந்தேன். என் சொந்த நினைவை இழந்தேன். அரசரால் அனுப்பப் பட்ட உதாயி என்பதையும் மறந்தேன். இந்தக் கோலத்திலேயே என் பிறவியை முடித்துக் கொள்ளவும் முடிவு செய்து விட்டேன்.

புத்தர்: உதாயி! தோன்றும் பொருள்கள் எல்லாம் உலகத்தில் ஒரு நாள் அழியக் கூடியதே! நம் உடலும் அப்படித்தான். நாம் தொடங்கும் காரியமெல்லாம் முடிவதும் தொடர்வதும் நம் கையிலே இல்லை. ஆகவே, எதற்கும் ஆசைப்படாமல் இரு...

உதாயி: பகவானே!. இருந்தாலும்... எனக்கு ஒரே ஒரு ஆசை...

புத்தர்: ஆசையா... ஆசைதான் அத்தனை துன்பங் களுக்கும் காரணம். அந்த ஆசையை வெல்லும் போது தான் ஆணவம் அழிகிறது. அகங்காரம் தொலைகிறது. ஆனந்தம் பெருகி ஆன்மா குளிர்கிறது. ஆகவே, கவலைகளுக்கெல்லாம் காரணமான உன் ஆசைகளைக் களைந்து விடு.

உதாயி: உண்மைதான் பகவானே! இருந்தாலும், இது தான் என்னுடைய இறுதி ஆசை.

புத்தர்: ம்.... (தலையசைக்கிறார்)

உதாயி: எனக்குக் கதை சொல்வதில், கவிதை பாடுவதில் கொஞ்சம் பயிற்சி உண்டு. சொல்ல வேண்டும் என்ற ஆசையும் உண்டு. அந்தக் கதையை உங்களிடம் இன்று கூறி விட வேண்டும் என்ற ஒரே ஒரு கடைசி ஆசை.

புத்தர்: அப்படியா! உன் விருப்பம் போலவே ஆகட்டும்.

உதாயி: பெருமானே... அது நல்ல இளவேனிற் காலம்.

பூர்ணிமை உள்ள பெலிவான நாள். பொன் மயமாகக் காட்சியளிக்கின்ற பூஞ்சோலை ஒன்றில், மஞ்சள் வெயில்பாடும் மனோகரமான வேளை... மங்களகரமான சூழ்நிலை, அப்பொழுது அழகே உருவான, ஆடம்பரம் நிறைந்த பல்லக்கு ஒன்று அங்கு வருகிறது. தாதியர் படை சூழ வந்த அந்த பல்லக்கிலிருந்து, அரசியர் ஒருவர் கீழிறங்கி வந்து, இயற்கைக் காட்சிகளில் தன் இதயம் வசமிழக்க, தன்னையே மறந்து நிற்கிறார். தாய்மைப் பேறுக்காகத் தன் தாய் வீடு சென்று கொண்டிருந்த அரசிக்கு, அங்கேயே ஒரு ஆண் குழந்தை பிறந்து விடுகிறது. அந்த அழகிய தெய்வாம்சமுள்ள குழந்தையைப் பெற்ற புனிதவதி... இல்லை... அபாக்கியவதி, ஏழாம் நாளன்று இறந்து போகிறார்...

புத்தர்: பாவம்...

உ.தாயி: தாயில்லா அந்தக் குழந்தையை, தன் தோள் மீதும், மார் மீதும் பொன்னைப் போல், கண்ணைப் போல் வைத்துக் காப்பாற்றுகிறார் தந்தை. தனக்குப் பிறகு தன் மகன் துணையிருப்பான் என்ற தளராத நம்பிக்கையுடன் வளர்த்தார். ஆனால், வ்யதான அந்த தந்தையுடன், அந்த மகனோ வாழவில்லை.

புத்தர்: ம்... மகன் எங்கே போய் விட்டான்?

உ.தாயி: காட்டிற்கு.

புத்தர்: காட்டிற்கா... ஏன்?

உதாயி: (மௌனம்)

புத்தர்: ஏன் மௌனமாயிருக்கிறாய்? ஏன் காட்டிற்கு போனான்- அவன் பெயர் என்ன?...

உதாயி: பெய...ர்... சித்தார்த்தர்.

புத்தர்: உதாயி... நீ என்ன சொல்கிறாய்?

உதாயி: ஆம் பகவானே!... கபில் வஸ்துவை ஆளும் சக்கரவர்த்தி சுத்தோதன மகாராஜாவிற்கும், ராணி மாயாதேவிக்கும் பிறந்த அந்தக் குழந்தையின் பெயர் சித்தார்த்தர்.

தன் மகனை இழந்த மன்னர் பிரான், தன் மகனை ஒரு முறை காண வேண்டும் என்று துடித்து, ஒன்பது முறை தூதுவர்களை அனுப்பினார். தூது வந்தவர்கள் எல்லாம் துறவியானார்கள். கடைசி முறையாக என்னை அனுப்பினார்கள். காந்தத்தினால் கவரப் பட்ட இரும்பு போல, உங்கள் காலடியிலே அடிமையாகி நிற்கும் என் கோலத்தைப் பாருங்கள். ஆனால், பகவானே! நான் வந்த நோக்கம்... உங்களை அழைக்க வேண்டும் என்ற நோக்கம்...எப்படியோ என் கடமை... முடிந்தது.

புத்தர்: உதாயி! உண்மையும் அறிவும் நிறைந்த அந்தணரே! இனி என் கடமை தொடங்கப் போகிறது. சாக்கிய வம்சத்தினரை யெல்லாம் புத்த மதத்திற்குக் கொண்டு வரும் காலம் வந்து விட்டது. கபிலவஸ்துவிற்கு நான்

வரப்போவதாக செய்தி அனுப்பு! பயணத்திற்கு ஆயத்தம் செய்!

உதாயி: நன்றி பகவானே நன்றி. (ஓடுகிறார்)

-திரை-

காட்சி 3

இடம்: அரண்மனை.

உள்ளே: சுத்தோதனர்: சேனாதிபதி: மந்திரி.

(மன்னர் மகிழ்ச்சியுடன் எதிரே நிற்கும் அமைச்சரையும் சேனாதிபதியையும் பார்த்து)

சுத்தோ நன்றி சேனாதிபதி நன்றி! இனிக்கும் சேதி தான்... இந்த சேதிக்காக, எத்தனை ஆண்டுகள் காத்துக் கிடந்திருக்கிறேன் தெரியுமா? சரி... என் இதயத்தை மகிழ்விக்கும் இனிக்கும் சேதி சொன்ன உனக்கு என்ன பரிசு வேண்டும்? சொல்! சீக்கிரம்...

சேனாதி: (மௌனமாக நிற்றல்)

சுத்தோ: மௌனம் வேண்டாம்...தயங்காமல் கேள்! முத்து மாலை வேண்டுமா? ரத்தின ஆரம் வேண்டுமா? பத்துத்தலை முறைக்குப் போதுமான பொற்குவியல் வேண்டுமா? எது வேண்டும்?

சேனாதி: அரசே! உங்கள் நீங்காத அன்பு தான் வேண்டும். அதுவே போதும்.

சுத்தோ: நீங்காத அன்புதான் என்னிடம் நிறைய இருக்கிறதே! ம்...காலம் வரும். நான் கவனித்துக் கொள்வேன். சரி சேனாதிபதி! நீ போகலாம். (சேனாதிபதி வணங்கியபடி போகிறார்)

அமைச்சரே! வராத மகன் வருகிறான்... நீங்கள் சொன்னது உண்மையாயிற்று... என் நம்பிக்கை வீண் போகவில்லை. எங்கே, இலவு காத்த கிளியாய் ஆகி விடுவேனோ என்று பயந்தே போனேன்.

மந்திரி: சத்தியம் என்றும் வெல்லும் அரசே! உத்தம குமாரன் உங்களைக் காண கட்டாயம் வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது... இன்று நிறைவேறி விட்டது. **நல்லவர்கள் ஆசையை இறைவன் நிறைவேற்றாமல் இருப்ப தில்லை. கொஞ்சம் பொறுமை வேண்டும்.**

சுத்தோ: அமைச்சரே! என் மகனை ஆடம்பரமாக வரவேற்க வேண்டும். ஏற்பாடுகளை இன்றே தொடங்குங்கள். அலங்காரம் பிரமாதமாக இருக்க வேண்டும். பார்த்தவர்கள் எல்லோரும் மயங்க வேண்டும். யாருக்கும், எப்பொழுதும் இதுபோல் அமைய வில்லை என்று இந்த நாடே புகழ வேண்டும்: ஆமாம்... இந்த உலகமே புகழ வேண்டும்...

மந்திரி: கபில வஸ்துவை தேவலோகமாக்கி விடுகிறேன். உங்கள் உத்திரவுக்காகத் தான் காத்திருந்தேன். வருகிறேன் சக்கரவர்த்திகளே; வணக்கம். (மந்திரி போகிறார்)

(அரசர் தனியே உலாவிய வண்ணம் பேசுகிறார்)

சுத்தோ: சித்தார்த்தன் வரப் போகிறான்...(மெதுவாக சிரித்தல்) ம்...வந்தால் எப்படி அழைப்பது... சித்தார்த்தா வா! என் மகனே வா என்றா?... ம்ஹூம். அவன் தெய்வப் பிறப்பு. உலகுக்கு வழிகாட்டி. பின்னே எப்படி அழைப்பது?

புத்த பெருமானே! வாருங்கள்! வாருங்கள் இப்படியா! சே! சே! என் மகனை, என் குமாரனை, நானே பிரானே பெருமானே என்றா அழைப்பது? கடவுளே! இது என்ன புதுக் குழப்பம்? இன்றைய இரவு விடியட்டும். இறைவா! எனக்கு நிம்மதி கிடைக்கட்டும். (போகிறார்)

-திரை-

காட்சி 4

இடம்: அரண்மனை வாயில்.

உள்ளே: சுத்தோதனர், புத்தர், இராகுலன்.

(சுத்தோதனர் ஆவலுடன் வழி யையே பார்த்துக் கொண்டு

நிற்கிறார். புத்தம் சரணம் கச்சாமி என்ற இசை ஒலிக்கிறது. மன்னவன் முகம் மலர்கிறது.)

சுத்தோ: அதோ, என் மகன் வருகிறான் - அரண்மனைக்கே வந்துவிட்டான்.

(சங்கம் சரணம் கச்சாமி என்ற அடிமுடிய, புத்தர் திருவோட்டுடன் உள்ளே நுழைகிறார். அரசரின் முகம் மாறுகிறது. வாய் தடுமாறுகிறது)

சுத்தோ: சித்தார்... புத்தர்...(குழப்ப நிலை) (புத்தர் தலை நிமிர்ந்து தன் தந்தையைப் பார்க்கிறார்.) உனக்கு இந்தக் கோலமா? ம்- -பள பளக்கும் பட்டாடை! பார்வையிலே கம்பீரம் ! நடையிலே பெருமிதம்! நாடுகாக்கும் நல்லறம்! இதை விட்டு விட்டு, கையிலே திருவோடு, கட்டிக் கொள்ள காவியுடை; இது என்ன கோலம்! கடவுளே! அரசுக்கு ஒரு வாரிசு-- ஆசைக்கு ஒரே மகன்?

புத்தர்: அரசே! மனிதனைக் கெடுப்பது மனம். மனதைக் கெடுப்பது ஆசை. அந்த ஆசையை அழிக்க வேண்டும். அறத்தை வளர்க்க வேண்டும். அதற்காகத்தான் இந்தக் கோலம்.

சுத்தோ: அரசனாக இருந்து செய்ய முடியாத அந்த அறத்தை, ஆண்டியாக இருந்தா செய்ய முடியும்?

புத்தர்: ஆண்டவனை அடைய ஆடம்பரம் கூடாது வேந்தே! ஆர்ப்பாட்ட மில்லைத பக்தி, சலன மில்லாத சிந்தை; இது தனிமையிலே, தவத்திலே

பெறக் கூடியது. சேனையோடு சேர்ந்து கொண்டு சண்டை போடும்போது அல்ல. அமைதி உள்ளத்திலே வேண்டும். அனுதாபம் செயலிலே வேண்டும்.

சுத்தோ: நல்லது. (சற்று எரிச்சலுடன்) இப்பொழுது உமக்கு என்ன வேண்டும்?

புத்தர்: (அமைதியாக) எனக்குப் பிச்சை வேண்டும்.

சுத்தோ: பிச்சையா! ஐயோ! இந்த வார்த்தைகளைக் கேட்க என் காதுகள் என்ன பாவம் செய்தனவோ! எதற்காக எடுக்க வேண்டும் பிச்சை? ஏன் அதிலே உனக்கு இச்சை!

அகிலத்தையே கட்டி ஆள்கிறேன் நான். நீ எனக்கு அன்புமகன். நாட்டை ஆள்வதை விட்டு விட்டு ஓட்டை ஏந்திக் கொண்டு அலைகிறாயே! நீதியா! நியாயமா!

புத்தர்: கடல் மீதே வாழ்ந்தாலும் குடிக்க வேறு தண்ணீர் தான் வேண்டும். துறவிக்குத் தேவை பிச்சை. பிச்சை எடுப்பது எங்கள் தொழில். அது உடலை வளர்க்க அல்ல... உயிரைக் காக்க. இந்த உலகத்தைக் காக்கும் தருமத்தைக் காக்க.

சுத்தோ: (கோபமாக) உனக்குப் பிச்சை இல்லை. என்னிடம் அது இல்லை. வேறு எது கேட்டாலும் தருகிறேன். இதோ! இந்த இராஜ்யம் வேண்டுமா! கேள் தருகிறேன்.

புத்தர்: ஆசையில்லை, அதனால் எனக்குத் தேவையில்லை.

சுத்தோ: தேவையில்லாத துறவிக்கு சேவையும் தேவையில்லை.

புத்தர்: எதையோ நினைத்துக் கொண்டு எப்படியோ பேசுகின்றீர்! அரசே! இல்லையென்னாது கொடுத்தது உங்கள் பரம்பரை. வந்தவர்கள் மனம் மகிழ வாரி வாரி வழங்கியது உங்கள் பரம்பரை! நான் இங்கு வந்தது தொல்லையென்றால், எனக்குப் பிச்சை இல்லையென்றால், எனக்கு வருத்தமே இல்லை. நாட்டிலே வீட்டுக்கா பஞ்சம்... வருகிறேன் மன்னா! வணக்கம்.

சுத்தோ: ஐயா துறவியாரே! வாசல் வரை வந்துவிட்டு வருகிறேன் என்று போவது முறையா?

புத்தர்: பெரியவரே! கோபம் அறிவுக்குப் பகை. தாபம் அன்புக்குச் சத்துரு. கோபமும் தாபமும் பாபத்துக்குத் தூதுவர்கள். உங்கள் அறிவை -- ஆசையும் பாசமும் மறைக்கிறது. பாசமும் பந்தமும் தெய்வீக உறவைத் துண்டித்து விடும். நீங்கள் நிதானமாக சிந்தியுங்கள். வருகிறேன்.

சுத்தோ: வீண்பழியை இந்த வயோதிகன்மேல் சுமத்தி விட்டுப் போகிறீரா துறவியாரே!

புத்தர்: (திரும்பிப் பார்த்து) ஏன்?

சுத்தோ: கேவலம் ஒரு அதிதிக்கு அன்னமிடக் கூட இயலாத அரசன் என்ற களங்கத்தை சுமத்தி விட்டுப் போகிறீரா? வேண்டாம்... வேண்டவே

வேண்டாம்! அந்த ஓட்டை இப்படிக் கொடுங்கள்...

(வாங்கிக் கொண்டு உள்ளே போய் திரும்பி வந்து மீண்டும் அந்த ஓட்டைப் புத்தரிடம் தந்துவிட்டு)

துறவியே! பொன்னையும் பொருளையும் மட்டும் நான் தானமாகத் தரவில்லை. இந்தப் பூவுலகம் வாழ, என் பொன்னான புத்திரனையே கொடுத்திருக்கிறேன் -- தானமாக! எனக்கா நிதானம் இல்லை. இருக்கிறது...இருக்கிறது. அதனால்தான் நான் இப்படி இருக்கிறேன்.

(அரசர் உள்ளே போகிறார்)

புத்தர்: மூப்பும், பிணியும், இறப்பும் மனிதரைக் கொல்லும் பிசாசுகள். அவைகளை மனிதன் தன் முதுகில் சுமந்து கொண்டு, ஆசை என்கிறான், பாசம் என்கிறான், சுகம் என்கிறான், சொர்க்கம் என்கிறான். பாவம் விளக்கைக் கையிலே பிடித்துக் கொண்டு வெள்ளத்திலே போய் விழுகின்ற விவரம் புரியாத மக்கள். இந்த ஏழை உலகம் என்று வருந்துமோ! என்று திருந்துமோ! (போகிறார்)

''புத்தம் சரணம் கச்சாமி'' என்ற குரல் பின்னனியில் ஒலிக்கிறது. சுத்தோதனர் மீண்டும் அதே இடத்திற்கு வந்து பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டே நிற்கிறார். அவரது பேரன் (புத்தரின் மகன்) இராகுலன் அங்கு ஓடி வருகிறான்)

இராகு: தாத்தா! தாத்தா!

சுத்தோ: (மெய்மறந்து நின்றவர் திடுக்கிட்டு) ம், என்ன ராகுலா?

இராகு: என் அப்பா இங்கு வந்தாரா? தாத்தா! அம்மா சொன்னது உண்மைதான். தாத்தா! அப்பா துறவியாகி விட்டதால், உலகமே அவரைப் புகழ்கிறதாமே!

சுத்தோ: ஆமாம்! இந்த உலகமே உன் தந்தையை, என் மகனை வாழ்த்துகிறது - வணங்குகிறது.

இராகு: துறவியாகி விட்டால், இந்த உலகமே வாழ்த்தும், வணங்கும், இல்லையா தாத்தா?

சுத்தோ: ஆமாம்! ஏன் அப்படிக் கேட்கிறாய்?

இராகு: ஒன்றுமில்லை. நானும் துறவியாகி விடலாம் என்று நினைக்கிறேன். எப்படி என் யோசனை?

சுத்தோ: ராகுலா! பைத்தியம் போல் உளராதே! உன்னை நம்பித்தானேடா இந்த உயிரையே வைத்திருக் கிறேன். நீயோ? வேண்டாம்! அப்படி நினைக்கவே வேண்டாம் (அவனை அணைத்து) இங்கே பார் ராகுலா! படை திரட்டுவேன், பாரை மிரட்டுவேன். உலகத்தை ஆள்வேன். திலகமாய் வாழ்வேன். இப்படி இருக்க வேண்டும் உன் பேச்சு. நீயோ! ராகுலா! என் உயிரைப் பறிப்பதில் உனக்கென்ன லாபம். சரி, உன் தாயார் யசோதை உனக்காக காத்திருப்பார் போ!

இராகு: சும்மா சொன்னேன் தாத்தா...வருகிறேன்.

(போகிறான்)

சுத்தோ: கடவுளே! என் பரம்பரைக்கு வந்தது பாபமா இல்லை சாபமா? எல்லோருமே துறவறம் போக விரும்புகிறார்கள், என்னைத் தவிர. எல்லோருக்குமே பைத்தியம் பிடித்து விட்டதா? என்ன செய்வேன்?

-திரை-

காட்சி 5

இடம்: அரச வீதி

உள்ளே : புத்தர்...இராகுலன்

(புத்தர் மௌனமாகப் போய்க் கொண்டிருக்கிறார். பின்னால் அவருடைய மகன் இராகுலன் ஓடிவருகிறான்)

இராகு: அப்பா (கூப்பிடுகிறான்)

புத்தர்: (திரும்பாமலேயே நடந்து கொண்டிருக்கிறார்)

இராகு: அப்பா...

புத்தர்: (திரும்பிப் பார்க்கவில்லை)

இராகு: (அவர் அருகில் ஓடிவந்து) அப்பா! என்னை ஒரு முறை திரும்பிப் பாருங்கள்...விரும்பிப் பார்க்க

வேண்டாம்!... வேண்டா வெறுப்பாக என்னை ஒரு முறை...

புத்தர்: (அவனைப் பார்த்துவிட்டு மீண்டும் நடக்கிறார்)

இராகு: அப்பா! கபிலவஸ்துவின் தெரு முழுதும் கத்திக் கொண்டே ஒடி வருகிறேன். என்னைப் பார்க்க கருணையில்லையா?... காலொடிந்த ஆட்டை விடவா நான் கீழாகி விட்டேன். அப்பா... நான் உங்கள் மகன்! நான் உங்கள் வாரிசு...

புத்தர்: (நின்று) உனக்கு என்ன வேண்டும் ராகுலா?

இராகு: எனக்கா! உரிமை வேண்டும்.

புத்தர்: (பேசாமல் நடக்கிறார்)

இராகு: பேசாமல் போவது தருமமல்ல...புத்தபிரானே! எனக்குரிய உரிமையைத் தரவேண்டும்... அதுதான் நீதி.. நியாயம்...

புத்தர்: என்ன உரிமை ராகுலா!

இராகு: என் வாழ்க்கையைப் பற்றி நானே ஒரு முடிவு எடுக்க விரும்புகிறேன். என் தந்தையாகிய உங்களிடம் கேட்பதுதானே முறை... கேட்கட்டுமா அப்பா...

புத்தர்: என்ன உரிமை... உனக்கு என்ன வேண்டும்?

இராகு: என் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும்?... உங்களை முதன்முதலாகப் பார்த்து, கடைசியாகக் கேட்கும் ஆசை... ஒரே ஒரு ஆசை!

புத்தர்: (மனம் குழம்பி) கேள் ராகுலா!...

இராகு: உங்களோடு நான் சேர்ந்து வாழ விரும்புகிறேன். இரக்கம் காட்டி என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

புத்தர்: வேண்டாம் ராகுலா! இது வயதிற்கு மீறிய ஆசை. உன் அன்னையிடம் போ. உன்னைக் காணாமல் தேடுவாள். அரச போகம் உனக்காகக் காத்திருக்கிறது. உன் தாத்தா தேடுவார்.

இராகு: எனக்கு எதுவும் வேண்டாம்... நீங்கள் தான் வேண்டும். உங்கள் சங்கம்தான் வேண்டும்.

புத்தர்: காட்டிலும் மேட்டிலும் அலைய உனக்கு உடல் பக்குவம், மனப்பக்குவம் போதாது... நீ போ... காலம் வரும் வரை காத்திரு.

இராகு: போக மாட்டேன். உங்களையும் போக விட மாட்டேன்! (வழியை மறிக்கிறான்)

புத்தர்: வீண் பிடிவாதம் வேண்டாம் ராகுலா! நீ வளர்ந்து பெரியவன் ஆனதும் வா.

இராகு: முடியாது! முடியவே முடியாது. என் ஆசையைத் தீர்த்து வைக்க உங்களால் முடியாது என்றால் என் முடிவைத் தேடிக்கொள்ள எனக்கு வழி தெரியும்.

(போகிறான்)

புத்தர்: வேண்டாம் ராகுலா! அருகில் வா! நீ கேட்டதை நான் தருகிறேன்! என்னைப் பின்பற்ற வந்த இளையவனே! நாளை காட்டிற்கு வா! எல்லாம்

உன் மனம் போல் நடக்கும்.

இராகு: நன்றி பெருமானே நன்றி. (போகிறான் ஆனந்தத்துடன்)

புத்தர்: ராகுலா! நீயுமா... (சிலையாக நிற்கிறார் குழப்பத்துடன்)

-திரை-

காட்சி 6

இடம்: கானகம்.

உள்ளே: புத்தர், உதாயி,இராகுலன், சுத்தோதனர்.

(புத்தர் யாரையோ எதிர்பார்த்து இருப்பது போல ஒரு திசையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவசர அவசரமாக உதாயி அங்கு வருகிறார்)

புத்தர்: உதாயி-சடங்குகள் நடத்த எல்லாம் தயாரா?

உதாயி: இராகுலன் வரவேண்டியது தான்-வந்தவுடன் தொடங்கி விடலாம்.

புத்தர்: (சிறிது நடந்து) இந்த இளம் வயதில் அவனுக்கு வந்த ஆசையைப்பார். ஆசை யாரையும் விடுவதில்லை, நிழல் போல் தொடர்ந்து வருகிறது. ம்... ஆசை மனிதனோடு கூடவே பிறந்து கொல்லும் வியாதி, இந்த வியாதிக்கு மருந்துதான் இந்தத் துறவறம். அகிலத்திற்குத் தருகின்ற இந்த மருந்தைத்தான் நாம் அவனுக்குத் தரப் போகிறோம்.

(இராகுலன் இரைக்க இரைக்க ஓடி வருகிறான்) அப்பா... (மாற்றிக்கொண்டு) புத்த பகவானே!

அந்த மருந்தைத் தாருங்கள் சீக்கிரம்-

(அவரது பாதம்வணங்குகிறான்... ராகுலா, ராகுலா என்று அழைத்த வாறு சுத்தோதனர் ஓடி வருகிறார் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க)

சுத்தோ: வேண்டாம் புத்த பகவானே! வேண்டாம்! அவனுக்கு, அந்தத் துறவறம் வேண்டாம் எங்கள்

பரம்பரையில் எஞ்சியிருப்பவன், என் பெயர் சொல்லி அரசாள இருப்பவன் இவன் ஒருவன் தான். இவனையும் உயிரோடு பறிகொடுத்து விட்டு, உலகில் என்னால் வாழவே முடியாது. எங்களை எல்லாம் ஆட்கொள்ள வந்த அருட் பெருங்கடலே எனக்கு....(கையை நீட்டுகிறார்)

புத்தர்: தயக்கம் வேண்டாம்... சொல்லுங்கள்...

சுத்தோ: என் கையசைத்தால் இந்தக் குவலயமே என் காலடியில் கிடக்கும். இந்தக் கைகளை ஏந்தி, மன்றாடி, உங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு நீங்கள் பிச்சையிட வேண்டும்.

புத்தர்: பிச்சையா...! போயும் போயும் துறவியிடமா?

சுத்தோ: ஆமாம்.. நான் மாபெரும் சக்கரவர்த்தி தான், என்னைக் கண்டால் மன்னரெல்லாம் மண்டியிட்டு வணங்குவார்கள். என் ஆணை கேட்டால், அகிலமே நடுங்கும். இருந்தாலும் ...என் போதாத காலம்...பொல்லாத வேளை ... நான் உங்களிடம் பிச்சைக் கேட்க வந்திருக்கிறேன்.மடிப்பிச்சை. பிள்ளைப்பிச்சை.

புத்தர்: பிள்ளைப் பிச்சையா...

சுத்தர்: புரியவில்லையா......இல்லை...புரியாமல் நடிக்கிறீரா...புத்தபிரானே! என் உயிரோடு விளையாடாதீர்கள்..

புத்தர்: நல்லதைச் செய்தால்...

சுத்தோ: எது நல்லது? என்னை அணு அணுவாய் கொல்வதா? சித்தார்த்தா! என்செல்வ மகனே! வீரம் மிகுந்தவனாக, தீரம் நிறைந்தவனாகவே உன்னை வளர்த்தேன்.. மனிதனாய் பிறந்தவர்கள் பெறாத அத்தனை சுகத்தையும், ஆடம்பர வாழ்வையும் உனக்கு அளித்தேன். விதிவசத்தால், நீ வீட்டை மறந்தாய், நாட்டைத் துறந்தாய்... காட்டில் புகுந்தாய்.

உன்னைப் புறிகொடுத்த நான் ஊமை ஆனேன்.

ஊமை அழுவது போல உள்ளம் குமுறினேன். பதறினேன்

உன்னைப் பின்பற்றி உன் தம்பி நந்தன் துறவி யானான். என்னிடம் இருந்த அமைச்சர்கள் அத்தனை பேரும் துறவியானார்கள்.

இப்பொழுது என் குலக் கொழுந்து, உன் மகன் என் அரசுக்குரிய ஒரே வாரிசு... அவனையும் அழைத்துக் கொள்கிறாயே...

வெந்த புண்ணிலே வேலா... சித்தார்த்தா! என் மேல் உனக்கு என்ன கோபம்? ஏன் இப்படி என்னை பழி வாங்குகிறாய்?...

(புத்தர் திடுக்கிட்டு) அ-ப்-பா-

சுத்தோ: வேண்டாம்... அப்படி என்னை அழைக்க வேண்டாம். கௌதமரே! ஒரே ஒரு வரம் மட்டும் கொடுங்கள். நான் உயிர் பிழைத்துப் போயே விடுகிறேன்.

புத்தர்: வரமா... வரம் தரும் ஆற்றல் எனக்கில்லையே...

சுத்தோ: உண்டு சித்தார்த்தா உண்டு... ஞான ஒளி பெற்ற உன்னைத் தவிர வேறு யாரால் தரமுடியும்? இந்த ஏழைக்கு ஒரே ஒரு வரம்...

புத்தர்: சொல்லுங்கள்.

சுத்தோ: சித்தார்த்தா...அரசாட்சியையும், அழகு மனைவியையும், ஆசை மகனையும் பிரிந்து, ஆரன்யத்திலே வந்து அவதிப்படுகின்ற உன்

மனநிலை வேறு. பக்தி வேறு. பக்குவம் வேறு. உன்னைப் போல மற்றவர்களையும் மாற்ற, என்னைப் போன்ற பெற்றோர்களைத் தவிக்க விடாதே. புத்த தருமத்தை யுத்த தருமமாக மாற்றாதே... பெற்றவர்களை நிம்மதியாக வாழவிடு. பெற்றோர்களை பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ விடு..

வருகிறேன் ... வா...ராகுலா...

(ராகுலனை இழுத்துக் கொண்டு போகிறார். அவன் பிரிய மன மின்றிப் போகிறான். புத்தர் அவர்கள் போன திசையைப் பார்த்துக் கொண்டே நிற்கிறார். குழப்பம் அவரது முகத்தில் பரவி பிறகு, தெளிவு பெறுகிறது. உதாயி அவரையே பார்த்துக் கொண்டு நிற்க, அவர் பக்கம் திரும்பி)

புத்தர்: உதாயி-- நமது சங்கத்திற்கு இன்றிலிருந்து ஒரு புது விதியை அமைப்போம். ''பெற்றோரின் அனுமதியில்லாமல் யாரையும் நம் சங்கத்தில் இனி சேர்க்கக் கூடாது.''

தெளிந்த நீரில் தான் முகம் பார்க்க முடியும்.

தெளிந்த அறிவில் தான் தெய்வீக சுகம் பார்க்க முடியும். வாருங்கள் போகலாம்.

(போகின்றனர்...புத்தம் சரணம் கச்சாமி என்ற ஒலி எழும்புகிறது)

-திரை-

காட்சி - 1

இடம்: பறம்பு மலை

உள்ளே: பாரி, கபிலர்.

(தமிழ் இலக்கியம்...புறநானூறு)

கடையெழு வள்ளல்களில் ஒருவன்...கொடையிலே மாரி... அவன் தான் பாரி... பறம்பு மலைத் தலைவன்...பார் போற்றும் கோமான்.

பாரியின் புகழ் பெருகப் பெருக, பாராண்ட மூவேந்தர்களின் உள்ளம் பொறாமையால் வேகிறது.

முடிவு...

பறம்பு மலை மூவேந்தர்களால் முற்றுகை இடப்படுகிறது. மூன்று மாதங்கள் கடந்தாலும் வெற்றி பெற முடியவில்லையே...

துடித்த மூவரின் தூதுவராகப் போகிறார் பாரியின் நண்பர் பாவேந்தர் கபிலர்.

அதன் விளைவாக ...

நாடாண்ட மூவரும் பாணராக வேடம் போட்டு, பாரியின் முன்னே பாடினர், ஆடினர்...

பாரி பார்த்தான்; சுவைத்தான்; பரிசு என்னவேண்டும் என்று கேட்டான்.

மண்ணையோ, பொன்னையோ மன்னர்கள் கேட்கவில்லை... பாரியையே பரிசாகக் கேட்டனர்.

படையிலே வீரம் காட்டிய பெருமகன், கொடை தர மறுத்தானா...? தடுத்தானா...?

இறுதியில் அவன் தந்த பரிசு என்ன?

(பாரியும் கபிலரும் நடந்துகொண்டே பேசுகின்றனர்)

கபிலர்: பறம்புமலைக் காவலரே! பாரி வள்ளலே! ஏதோ என்னைக் கேட்க வேண்டும் என்றீரே!... நாம் இப்பொழுது இருப்பது பறம்பு மலை உச்சியிலே...தனிமையிலே...

பாரி: ஆமாம் கபிலரே... மனதிலே குழப்பம்...

கபிலர்: குழப்பமா...

பாரி: ஆமாம்... மலையைச் சுற்றி மேகங்கள் சூழ்ந்திருப்பது போல, என் நாட்டைச் சுற்றிப் போர் மேகங்கள் சூழ்ந்திருப்பது போன்ற ஒரு பிரமை. அந்த நினைவைத் தொடர்ந்து நிலை மாறும் பலவகையான எண்ணங்கள். ஆனால், அது பயத்தினால் அல்ல..

கபிலர்: எப்பொழுதும் போல...

பாரி: எனக்கேற்படும் குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ளத்தான் போகிறேன்.

கபிலர்: தாராளமாகக் கேளுங்கள்... பொருளை வாரி வாரித் தரும் தங்களிடம், தமிழால் தினம் தினம் பரிசு பெறும் புலவன் நான். உங்கள் நண்பன் நான்.

பாரி: உண்மைதான்... கபிலரே!...மிக அருமையானது நமது மனித பிறவி...அப்பிறவியை எடுத்த நாம் அடுத்து செய்யவேண்டியது என்ன?

கபிலர்: ம்...தன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும்.

பாரி: நேசிக்கும் பண்பு எப்பொழுது வரும்?

கபிலர்: நிதானமாக சிந்தித்து; மனதைப் பக்குவப் படுத்திக் கொள்ளும்போதுதான் வரும்.

பாரி: மனப்பக்குவம்... அது எப்படி வரும்?

கபிலர்: பக்குவம் என்பது எதையும் தாங்கும் இதயத்தைப் பெறும்போது.

பாரி: எதையும் தாங்கும் இதயம் வரவேண்டுமானால்?

கபிலர்: இன்றிருப்பார் நாளைக்கில்லை. நாளைக்கு நாமும் இல்லை... ஆகவே, வாழும் வரை பிறருக்கு உதவியாக வாழ்வோம்'' என்று நினைக்கும்போது.

பாரி: உதவியாக வாழ்வது என்றால்... உதவி என்பது

கபிலர்: உள்ளத்தின் மலர்ச்சி.

பாரி: அன்பு என்பது...?

கபிலர்: அனுதாபத்தின் முதிர்ச்சி.

பாரி: அறிவு என்பது...?

கபிலர்: ஆராய்ச்சியின் வளர்ச்சி.

பாரி: ஆராய்ச்சியை வளர்ப்பது?

கபிலர்: கற்று அடங்கிய உள்ளம்.

பாரி: உள்ளம் என்பது...?

கபிலர்: பண்பை வளர்க்கும் நிலம்.

பாரி: எது பண்பான உள்ளம்?

கபிலர்: யாருக்கும், எப்பொழுதும் துரோகம் நினைக்காதது.

பாரி: துரோகம் என்றால்?

கபிலர்: ஆசைகாட்டி மோசம் செய்வது, தருகிறேன் என்று கூறி காரியம் முடிந்த பிறகு... தராமல் ஏமாற்றுதல்-துரோகம்.

பாரி: புகழ் என்பது...

கபிலர்: நல்லது செய்த உள்ளத்திற்கு இந்த உலகம் காட்டும் நன்றி.

பாரி: அந்தப் புகழை அழிப்பது?

கபிலர்: பொறாமை. பொறாமை என்பது வாழ்வை அரிக்கும் புற்று நோய்... மனித இனத்தை அழிக்கும் பொல்லாத நோய்.

பாரி: உண்மைதான் கபிலரே!... பொறாமை ஒரு பயங்கர நோய்தான். அதற்கு மத்தியிலேதான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றிலும் எத்தனையோ பொறாமை கண்கள்...புலமை நிறைந்த கபிலரே!... ஒரு வேண்டுகோள்.

கபிலர்: சொல்லுங்கள் மன்னா?...

பாரி: என் இனிய நண்பராக, எனக்கு வழிகாட்டியாக, என் கூடவே எப்பொழுதும் நீங்கள் இருக்கவேண்டும். மறுக்காதீர்கள். நான் எதற்காகவும் யாரையும்...

கபிலர்: எல்லாம் தெரியும் மன்னா! கரும்பு தின்னக்

கூலியா? மன்னவன் ஆணைக்கு மறுவார்த்தை ஏது?

பாரி: கபிலரே! இதோ பாருங்கள்... உங்கள் புலமைக்கு என் நட்புக்கு, நான் தரும் பரிசு... உங்கள் கண்களுக்கு எவ்வளவு தூரம் தெரிகிறது.

கபிலர்: ம்...அதோ...சிறு வாய்க்கால் ஒன்று...

பாரி: கபிலரே... அது சிறு வாய்க்கால் அல்ல... ஆறு... அந்த ஆறுவரை, அத்தனை நிலங்களும் உங்களுக்குத் தான்... உங்களுக்கே உரிமையாக்குகிறேன். உங்கள் புலமைக்குப் பரிசாக அளிக்கிறேன்.

கபிலர்: மன்னா...

பாரி: இதையும் மறுக்காதீர்கள்...வாருங்கள் போகலாம்.

கபிலர்: எல்லோருக்கும் தந்து சுகம் காணும் தயாநிதியே! வாழ்க... உலகைக் காக்க மாரி, உயிர்களைக் காக்கப் பாரி, என்று உலகம் போற்ற வாழ்க... (வாழ்த்துகிறார்)

(பாரி புன்னகை செய்கிறார்)

-திரை-

காட்சி 2

இடம்: அரண்மனை

உள்ளே: சேரன், சோழன், பாண்டியன்...

(சேரன் நின்று கொண்டிருக்கிறான். சோழனும், பாண்டினும் தங்கள் இருக்கையில் அமர்ந்திருக்கின்றனர்)

சேரன்: மாரியாம்... பாரியாம்; வள்ளலாம், வாழ்கவாம். கேட்டீர்களா மன்னர்களே! மூவேந்தர்கள் நாம் வெட்கத்தோடும் வேதனையொடும் கூடி இருக்கிறோம். கேவலம்! பாரி, ஒரு குறுநில வேந்தன்... குரங்குத் தலை போன்ற பறம்பு மலைக்கு சொந்தக்காரன்.

சோழன்: குறுநில மன்னன் நமக்கு கொத்தடிமைக்காரன். ஆனால் அவன் புகழ் இப்படிப் பரவுவது கொடுமை.

பாண்டி: கொடுமையை முளையிலே கிள்ளி எறிய வேண்டும். அதை முற்ற விட்டு விட்டால் ஆபத்து.

சேரன்: பாண்டியரே! ஆபத்து வந்து அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன. அதாவது நாம் மூவரும் ஒன்று கூடவே அநேக ஆண்டுகள் ஒடிவிட்டன.

சோழன்: ஆண்டுகள் ஓடினால் என்ன? ஆண்டவன் நம்கூட அல்லவா இருக்கிறான். முத்தமிழ்

நாட்டின் மூவேந்தர்களும் இதோ கூடி இருக்கிறோம். இனி, எத்திசையிலிருந்து பகைவர்கள் வந்தாலும் தூள் தூள்தான்.

பாண்டி: உண்மைதான். கையகல நாட்டுக்குத் தலைவன். ஆனால், பொய்யாக வதந்திகளைப் பரப்பி விட்டு மாரி என்கிறான், பாரி என்கிறான்...

சேரன்: வஞ்சகம் முற்றுகிறது. இதை விட்டு விட்டால், அதுவே நம் வாழ்வுக்கு நஞ்சாகி விடும்...என்ன செய்யலாம்!

சோழன்: என்ன செய்யலாம் என்பது கோழைகள் செயல். திரட்டு படையை, விரட்டு பகையை, வெல்க புகழை'' -இப்படிப் பேசாமல் இருப்பதே நமக்கு அவமானம்... நமக்கும் பலஹீனம்.

பாண்டி: பேச்சு இனிப்பாக இருக்கிறது. சொல் செயலாக வேண்டாமா? நாம் நினைப்பது போல் எல்லாம் நடக்க வேண்டுமே?...

சேரன்: ஏன் நடக்காது? கடல் போன்ற படை. புயல் போன்ற நடை--இடி போன்ற முழக்கம். எதிரே எப்படை நிற்கும்? சோழரே! பாண்டியரே! சொல்வதைக் கேளுங்கள். பாரியின் புகழ் பரவியது போதும். அவனை நாம் வெல்ல வேண்டும். கொல்ல வேண்டும்.

சோழன்: ஒன்றே செய்வோம்... அதை இன்றே செய்வோம்.

பாண்டி: புறப்படுங்கள் தோழர்களே! பதவியும், பணமும்,

புகழும், இன்பமும் பசு போல் இருந்தால் வராது. புலிபோல் பாய்ந்தால் தான் கிடைக்கும். பறம்புமலையா! குறும்புத் தலையா!

சேரன்: முற்றுகை இடப் போகிறோம். முற்றி விட்ட பகை வெடிக்கும், மூண்டெழுந்த படை கண்டு அவன் மனம் துடிக்கும். நம் வாள் அவன் உயிரைக் குடிக்கும். ஒழிந்தான் பாரி --

(மூவரும் சிரிக்கின்றனர்)

-திரை-

காட்சி 3

இடம்: பாரி அரண்மனை.

உள்ளே: பாரி, கபிலர். சேனாபதி.

(கபிலரும் சேனாதிபதியும் நின்று கொண்டிருக்க, பாரி அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருக்கிறார்)

பாரி: மூளையில்லாத மூவேந்தர்கள் முற்றுகை போட்டிருக்கிறார்கள், மலையைச் சுற்றிய மரமெல்லாம் யானைக்கூட்டம். தெருவெங்கும் தேரோட்டம். நம்மைப் பிடிக்கும் நப்பாசையில் திரிகிறார்கள். என்னை வெல்வது எளிதென்று எண்ணி முயல்கிறார்கள்.

கபிலர்: பாவம்! பொறாமை அவர்களை பாடாய்

படுத்துகிறது. புலியைக் கொல்ல எலிப்படை, அதற்கு ஒரு கூட்டணி, கேலிக் கூத்தாக இருக்கிறது.

பாரி: ஆமாம் கபிலரே... பறம்புமலையை வெல்ல வேண்டுமாம். என்னைப் பிடித்துக் கொல்ல வேண்டுமாம். எப்படி அவர்கள் ஆசை?...

சேனாதி: மிகமிக அற்ப ஆசை வேந்தே! தமிழ் வாழ, தரணி வாழ, ஏழைகள் வாழ் நீங்கள் வாழ்ந்தால், அந்தக் கோழைகளுக்கென்ன வயிற்றெரிச்சல்?

கபிலர்: அதுதான் பொறாமை. அது மனிதர்களைக் குரங்காக மாற்றி விளையாடும். கொடுமையான பேய். பொறாமை எவனுக்கு வருகிறதோ, அவன் தனக்குத் தானே ஒரு பெரிய குழியை வெட்டிக் கொள்கிறான் என்றே அர்த்தம்.

பாரி: மூவேந்தர்களும் கோட்டைக்கு வெளியே... ஐயோ பாவம்! அவர்கள் பனியிலும், மழையிலும் வெயிலிலும் நனைந்து காய்கிறார்கள். இருக்க அரண்மனை இருந்தும், இப்படி மற்றவர்கள் சிரிக்கும் நிலைக்கு வீதி வரை வந்து விட்டார்களே...

சேனாதி: அப்படி வாடி வதங்கினால் தான் அவர்கள் ஆணவம் அழியும். அகம்பாவம் ஒழியும்.

கபிலர்: மக்களுக்கு வழிகாட்டியாக வாழ வேண்டியவர்கள். மாறிப் போய் விட்டார்கள். பெருமிதத்திற்குப் பதிலாக பேராசை.

அன்புக்கும், பண்புக்கும் பதிலாக ஆணவம். அகம்பாவம். வீரமும் விவேகமும் அவர்களை விட்டு விலகி விட்டதோ என்னவோ, வாய்ப் பேச்சிலே இன்று இன்பம் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

பாரி: அது அவர்கள் தலைவிதி. எடுத்து வாழும் இன்பத்தை விட, கொடுத்து வாழும் இன்பமே மிகச் சிறந்தது. இதைக் கொடுத்துப் பார்த்தால் தான் புரியும். கெடுத்துப் பார்த்தால் புரியாது. சேனாதிபதி முற்றுகையால் நம் மக்கள் எல்லாம் பாதிக்கப் படவில்லையே.

சேனாதி: நிம்மதியாகவே வாழ்கிறார்கள். தேவையான உணவு, அன்றாடம் வேண்டிய அத்தனையும் எளிதாகவே கிடைப்பதால், யுத்த பயம் என்ற நினைவே இல்லாமல், வழக்கம் போலவே வாழ்கின்றார்கள். பகைவர்கள் எத்தனை மாதங்கள் இங்கே காத்துக் கிடந்தாலும், நம்மையோ, நமது மக்களையோ ஒன்றும் செய்துவிட முடியாது.

பாரி: நன்று சேனாதிபதி! நண்பரே (கபிலரை நோக்கி) அந்த மன்னர்களைத் திருத்த, மதியை மாற்ற வேறு ஏதாவது நல்ல மார்க்கம் உண்டா?

கபிலர்: யோசிக்கிறேன் மன்னவா... அவர்களுக்கு ஒரு வழி காட்ட வேண்டும். இந்தப் போர்க்காட்சி போக வேண்டும். அதற்கு நான் முயற்சி செய்கிறேன்.

பாரி: தமிழ்க் கவிஞரே ... ஓய்வாக யோசியுங்கள்...பிறகு சந்திப்போம், சேனாதிபதி...எல்லா காவலும் வலுவோடு இருக்கட்டும்.

(இருவரும் வணங்கிப் போகின்றனர்)

(தனியாக) சரித்திரத்திலே ஒரு பெரிய புரட்சியைச் செய்கிறார்கள் மூவேந்தர்கள். ஆமாம், இதைப் பிற்காலத்தார் சொல்லிக் கொள்ள ஒரு சுவையான அனுபவமாக இருக்கும்...கொடையைத் தடுக்கப் படை... புகழை அடக்கப் பகை... (சிரித்துக் கொள்கிறார்)

-திரை-

காட்சி 4

இடம்: பாசறை

உள்ளே: சேரன், சோழன், பாண்டியன், சேவகன், கபிலர்.

(சேரன், சோழன், பாண்டியன் மூவரும் அமர்ந்திருக்கின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்தபடி, ஏதோ குழப்பத்தில இருப்பது போன்ற சூழ்நிலை. என்ன செய்வது இனி என்ற பாவனையில், யோசனை

யுடன் காட்சியளிக்கின்றனர். அப்பொழுது சேரன் எழுந்து உலவுகின்றான்.)

சேரன்: மலையை முற்றுகை இட்டுப் பயனில்லை. மாதங்கள் மூன்று ஓடி விட்டன. அந்த மடையனின் மண்டைக் கனம் இன்னும் அடங்கவில்லை. நம் படை புகவும் ஒரு தடங்கலும் இல்லை.

சோழன்: நமக்கு ஒரு தூது கூட அனுப்பவும் இல்லை. இது என்ன பறம்புமலையா! இல்லை பாம்பு மலையா...

பாண்டி: உணவுக்கு என்ன செய்கிறான்...ஒரு வழி கூட இல்லாமல் அடைத்து விட்டோம்... போக்கு வரத்து எப்படி இருக்கும்? ஏதாவது சரங்க வழி...

சேரன்: இல்லை... இருக்க வழி இல்லை. பாருங்கள். இன்னும் இரண்டே நாளில் அங்கிருந்து பதில் வரத்தான் போகிறது.

சோழன்: ஆமாம். பசித்த மக்கள் பாய்ந்தெழுந்தால், பாரி எங்கே போவான்? பதறி அடித்துக் கொண்டு இங்குதான் ஓடி வருவான்.

பாண்டி: மயில் இறகு போடட்டும் என்று காத்தி ருப்பதில் புண்ணியமில்லை. இதற்கு ஒரு ஏற்பாடு செய்து தான் தீர வேண்டும், புலி பதுங்கி இருக்கிறது என்றால் பாய்வதற்காகத்தான். நாம் எளிதாக எண்ணினால், நம் கதி அதோகதிதான்.

(சேவகன் உள்ளே வருகிறான்)

சேவகன்: அரசே! புலவர் பெருமான் கபிலர் வந்திருக்கிறார். உங்களைக் காண வேண்டுமாம்.

சேரன்: ம்...போய் வரச் சொல். (சேவகன் வணங்கிப் போகிறான்) ம்... சமாதானத் தூதா? இல்லை வஞ்சகத் தூதா...

சோழன்: பார்க்கலாமே! வருவது புயலா தென்றலா என்று.

பாண்டி: வரவேண்டும் புலவரே...(கபிலர் வருகிறார்)

சேரன்: தங்கள் வரவு நல்வரவாகுக... இப்படி அமருங்கள்...

கபிலர்: (ஆசனத்தில் அமர்ந்து கொண்டே) நன்றி மன்னவா! தமிழ் உங்களை வாழ்த்தும். வாழவைக்கும்.

சோழன்: பகைவரின் பாசறையில் பைந்தமிழ்ப் புலவர். அதுவும் பாரியின் நண்பர். ஆச்சரியமாயில்லை.

கபிலர்: அதிசயமாகக் கூட இருக்கும்.

பாண்டி: எது கவிஞரே! நீங்கள் வந்ததா இல்லை, நாங்கள் வரவேற்பு தந்ததா?

கபிலர்: இரண்டுந்தான் மன்னர் பெரு மக்களே! கோபிக்க வேண்டாம். உண்மையைச் சொல்லுகிறேன்.

சேரன்: சொல்லுங்கள். உண்மையாக இருந்தால் உடன் பாடு உண்டு.

கபிலர்: முத்தமிழ் காவலர்களே! மூவேந்தர்களே!

ஒற்றுமையாகத் திரண்டு வந்து, உங்கள் படைகளை திரட்டி வந்து, பாரியை மிரட்டிக் கொண்டு முற்றுகை இட்டிருக்கிறீர்கள். வெற்றியும் கிடைக்கும் என்று மனப்பால் குடித்து, வாழ்நாட்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?

சோழன்: இன்று இல்லையென்றால், வெற்றி நாளைக்கு வருகிறது. கோட்டையைச் சுற்றிக் காவல். ஒரு குருவி காக்கை கூட உள்ளே போகவோ வரவோ முடியாது. உங்கள் மக்களும் மன்னரும், ஒன்று பஞ்சத்தால் சாக வேண்டும்; அல்லது பயந்து எங்களிடம் வந்து சரணாகதி அடைய வேண்டும்.

கபிலர்: இதைத்தான் மனப்பால் என்றேன். பகற் கனவு என்றேன். ஆசையில் ஓடிவந்து, அவசரத்தால் மதியிழந்து அவதிப்படும் அரசர்களே! எங்கள் வலிமையைக் கேளுங்கள். எங்கள் மலைவளம் நிலையான வளம் உடையது. மூங்கில் மரத்திலும் அரிசி உண்டு. முற்றி வெடிக்கும் பலாப் பழங்கள் கொட்டிக் கிடக்கும் குவியலுண்டு. கொம்புத் தேன் உண்டு. காலமெலாம் பசி போக்க, துயர் நீக்க வள்ளிக் கிழங்குகள் நிறைய உண்டு. தேவையான தினைகளைக் கொண்டு வர, பயிற்சி பெற்ற கிளிகள் எங்களிடம் எத்தனையோ உண்டு. மக்களிடம் வீரம் உண்டு. தீரம் உண்டு. எத்தனை ஆண்டுகள் எதிர்த்தாலும், உங்களை எதிர்க்க எங்களிடம் பலம் உண்டு. நலம் உண்டு. வளம் உண்டு.

மூவரும்: (கோபமாக, ஆச்சரியமாக) என்ன?

கபிலர்: ஆமாம்... பாரியிடம் பேராற்றல் மிக்கப் படையுண்டு. உங்களால் ஒரு நாளும் வெற்றி பெற முடியாது.

பாண்டி: ம்ஹூம்...வெற்றி பெறவேண்டுமானால்...?

கபிலர்: பிச்சையெடுக்க வேண்டும்.

மூவரும்: (கோபமாக) என்ன?

கபிலர்: சீற்றம் வேண்டாம். சிந்தனை தேவை. பகை என்று வந்தால், படை கொண்டு வந்தால், பாழ் படுத்திடுவான் உங்களை. ஆடிப்பாடி வரும் விறலியர். பாணர் போல ஓடி வந்து, கூடி நின்று, பாரிமுன்னே பாடி ஆடிப் பரிசு கேட்டால், அவன் பொன்னையும் கொடுப்பான். பறம்பு மண்ணையம் கொடுப்பான்... ஏன்? தன்னையே கொடுப்பான். படையாக இருந்தாலும், கொடையாக இருந்தாலும், வெற்றி பாரிக்குத்தான். இதைக் கூறத்தான் வந்தேன். வேந்தர்களே! ...(கபிலர் போகிறார்...அவர் போனதும்)

சேரன்: (யோசனையுடன்) பறம்பு மலைக்கு இத்தனை வளமா?

சோழன்: பாரிக்கு இத்தனை பலமா...

பாண்டி: போர் தொடுத்தால் வெற்றி பெற முடியாதா?

சேரன்: மன்னர்களே! முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். வைரத்தை வைரத்தால் தான் அறுக்க வேண்டும். அவன் சூழ்ச்சியை,

சூழ்ச்சியால் தான் வெல்ல வேண்டும்.

சோழன், பாண்டி : எப்படி?...

சேரன்: பாணரைப் போல் வேடமிட்டுப் போவோம்.

சோழன், பாண்டியன்: போனால்...

சேரன்: தானமாகக் கேட்கலாம்...

சோழன், பாண்டியன்: பிச்சையா? (ஏளனமாக)

சேரன்: சே! பாரியையே கேட்டு-- இங்கே கொண்டு வந்து...

(தலையைச் சீவி எறிவது போலச் சைகை செய்கிறான். மூவரும் ஆங்காரமாகச் சிரிக்கின்றனர்)

-திரை-

காட்சி 5

இடம்: அரண்மனையில் ஒரு அறை.

உள்ளே: கபிலர், சேனாதிபதி.

(கபிலர் ஏதோ யோசனையில் நின்று கொண்டிருக்கிறார்)

கபிலர்: மூவேந்தர்களுக்கும் நன்றாகப் படும்படி இடித்துரைத்தேன்... இனியாவது திருந்துவார்கள் என்று நம்பலாம்-என் கடமையைச் செய்து விட்டேன். பறம்பு மலையைச் சுற்றியுள்ள

போர்க்க கூச்சல் இனி ஓயும்-மாயும்.

சேனாதி: (சேனாதிபதி ஓடி வருகிறார்) ஐயா! ஐயா!

கபிலர்: என்ன சேனாதிபதி! ஏன் இப்படிப் பதறுகின்றீர்?

சேனாதி: நடக்கக் கூடாதது நடந்து விட்டது. கொடுக்கக் கூடாததை நம் மன்னர் தானமாகக் கொடுத்து விட்டார்.

கபிலர்: எதைக் கொடுத்தார்? யாருக்குக் கொடுத்தார்? விளக்கமாகக் கூறுங்கள்!

சேனாதி: மூன்று மன்னர்களும் பாணராக, விறலியராக வந்தார்கள். ஆடிப் பாடினார்கள். பரிசு கேட்டார்கள்.

கபிலர்: நான் தானே கூறினேன் . பிறகு...

சேனாதி: பரிசு என்ன என்று கேட்டதற்கு, மன்னரையே வேண்டும் என்று கேட்டார்கள். மன்னரும் மறுக்காமல் தன்னையே தந்து விட்டார். அவர்களும் அவரைக் கொண்டு சென்று...

கபிலர்: ஐயோ பாரி! பொன்னைக் கொடுத்தது போதாது என்றா உன்னையே கொடுத்து விட்டாய். விதியே! இதெல்லாம் உன் சதியா?... பாரி, பொறாமைதான் உன்னை அழித்ததோ? நட்புத் திலகமே! நற்சுவைத் தமிழ் உலகமே! நீ இல்லாத உலகில் நானா? இல்லை, இதோ! நானும் வருகிறேன்! நானும் வருகிறேன்!! (ஓடுகிறார்)

-திரை-

3. வெற்றி யாருக்கு?

(தமிழ் இலக்கியம் ...புறநானூறு)

தந்தைக்கும் தனயனுக்கும் சிம்மாசனப் போட்டி.

அன்போ, அறிவோ, பண்போ, பாசமோ அங்கு பேசவில்லை.

மடைதிறந்த வெள்ளமென உணர்ச்சி மயமான சொற்கள் உதிர்கின்றன.

இருவரும் படை திரட்டுகின்றனர். பகை முடித்துக் கொள்ள!

இடையிலே புலவர் வருகிறார். தடை செய்கிறார். இறுதியிலே வெற்றி யாருக்கு?

தந்தையாம் கோப்பெருஞ் சோழனுக்கா?

தனயனான இளவரசனுக்கா?...கவிபாடும் புலவருக்கா?

காத்திருந்த மக்களுக்கா?...

3. வெற்றி யாருக்கு?

காட்சி 1

இடம்: அரண்மனையில் ஒரு அறை.

உள்ளே: இளவரசன், தளபதி.

(இளவரசன் கோபமாக நடைபோட்டுக் கொண்டிருக்கிறான். தளபதி அங்கு வந்து வணக்கம் செய்கிறான்)

தளபதி: அடியேனின் வணக்கம் இளவரசே! அழைத்ததாகத் தகவல் வந்தது...

இளவ: ஆமாம் தளபதி... நான் தான் உன்னை அழைத்தேன். ஏன் தெரியுமா?... ஆணவக் காரர்களை இங்கிருந்து விரட்ட; தானென்று தருக்கித் திரியும் தறுதலைகளின் தலைகளை உருட்ட; வெட்டு என்பதற்கு முன்னே கட்டுகின்ற வீரர்களைத் திரட்ட...

தளபதி: காரியம் புரிகிறது. அதற்கான காரணத்தை நான் அறியலாமா இளவரசே!...

இளவ: காரணமா?...உனக்குத் தெரியாமலா?...போர் தொடுக்கப் போகிறேன்...போர்...உரிமைப்போர்! உரிமையை மறந்தவரை-உணர்ச்சியற்று, உண்மை மறந்து, வீண் பெருமை பேசி, விவேகம் துறந்தவரை, இந்த ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு, இளமை பவனிவர, வீரம் அவனிபெற, நான் முடி சூட்டி இந்த நாட்டை ஆளும் நல்லதொரு காலம் வர...வீரப் போர் தொடுக்கப் போகிறேன்...அதுவும் விவேகப் போர்...

தளபதி: போரா?...யாருடன்?...

இளவ: யாருடனா?...என்னைப் பெற்றவருடன்...இந்த

நாட்டு மன்னருடன்... என்னைப் பெற்றவர்! (இகழ்ச்சியாக) தந்தையாம் தந்தை! சீ... நினைக்கும் பொழுதோ-விந்தையிலும் விந்தை...

தளபதி: கோபமாகப் பேசுகிறீர்கள்... கொந்தளிக்கும் அளவுக்கு என்ன நடந்து விட்டது? எதுவும் எனக்குப் புரியவில்லை... இளவரசே! கொஞ்சம் விவரமாகக் கூறினால்...

இளவ: கூறுகிறேன். மண்ணாளப் பிறந்தவன் நான்... விண்ணாளப் போகின்றவர் என் தந்தை. இதற்கிடையிலே அந்தக் கிழவருக்கு எத்தனைப் பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை... எத்தனைப் பேராசை...

தளபதி: ஆசையிருப்பதில் தவறில்லையே! மணிக்கு ஓசை எவ்வளவு முக்கியமோ, மனிதனுக்கும் ஆசை அப்படி...

இளவ: உபமானம் நன்றாக இருக்கிறது! ஆனால் அது நம் தன்மானத்திற்கு ஒத்து வராது. புரியாதவனே! நடைமுறை தெரியாதவனே! கேள்...கொஞ்சம் சிந்தி...கூர்மையாக செயல்படு...

ஆண்டு கொண்டேயிருக்கும் என் தந்தையின் காலம், நீண்டு கொண்டே போகிறது. வேண்டு மென்றே காலம் கடத்துவதால், மாண்டு கொண்டே போகிறது என் வீரம், விவேகம் எல்லாம். இனி, இளமை நாடாள வேண்டும். முதுமை காடாள வேண்டும்.

இதுதானே முறை...

முறை தவறிப் போகும் போது முறையைச் சுட்டிக் காட்டுவதுதானே மகனாகிய எனக்கும் முறை?

தளபதி: தந்தையிடம் நேரில் கேட்டீரா?...கேட்டதற்கு என்ன சொன்னார்?... தர முடியாது என்றா சொல்லி விட்டார்?

இளவ: பேசும் தோரணை அப்படித்தான் இருக்கிறது. வீசுவதிலிருந்து தெரியாதா அது புயலா, தென்றலா என்று! பாசத்தையும் மறைக்கிறது பதவி ஆசை. பாசம் வேஷமாகும் போது-மோசம்தானே வந்து முன்னே நிற்கிறது!

தளபதி: அதற்காக நாம் செய்ய வேண்டியது?...

இளவ: போர் முரசைத் தட்ட வேண்டும். பேரரசைப் பிடிக்க வேண்டும். பேராசை பிடித்த என் தந்தையை இரண்டிலொன்று பார்த்து விட வேண்டும்.

தளபதி: அவசரப்படுவதில் அர்த்தமில்லை இளவரசே! சாம, பேத, தான, தண்டம். அதுதானே வாழ்க்கைத் தருமம்...இன்னும் ஒரு முறை...ஒரே ஒரு முறை...

இளவ: அதாவது கடைசி முறை.. கடைசி முறையாகத் தானே... கேட்கிறேன்... கேட்டே விடுகிறேன்! கிழப்புலி கூறப்போகும் பதிலையும் கேட்டே விடுகிறேன். அது கொடுக்க மறுத்தால்...

தளபதி: எடுக்க வேண்டியது முடிவை!...தொடுக்க

வேண்டியது படையை!... முடிக்க வேண்டியது.. நம் கடமை.

இளவ: தளபதி...(குழப்பத்துடன்) அதற்குள் எனக்கு ஏதேனும் ஆபத்து வந்தால்...

தளபதி: துணை வருவேன் நான்...உங்கள் உயிர் காக்க, என் உயிர் தருவேன். உங்கள் உடம்பில் தூசு படவோ, புகழில் மாசுபடவோ, என் மனம் பொறுக்காது இளவரசே!

இளவ: இது போதும் எனக்கு. இரண்டில் ஒன்று பார்த்து விடுகிறேன்...நாளைக்கு இதே இடத்தில் காத்திரு. வெற்றி எனக்கா, என் தந்தைக்கா என்பதை முடிவாகக் கூறி விடுகிறேன்.

(சிரித்துக் கொண்டே போகிறான்)

தளபதி: வெற்றியோடு வாருங்கள்...(அவன் போனதும்)

(தனியாக) ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். எனக்குப் பதவி உயருகிறதே... அதுபோதும்... நான் எதற்கும் தயார்!

(சிரிக்கிறான்)

-திரை-

காட்சி 2

இடம்: அரண்மனையில் மற்றொரு அறை.

உள்ளே: கோப்பெருஞ் சோழன், புலவர், இளவரசன்.

(சோழன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க, புலவர் பேசுகிறார்)

புலவர்: எதற்கும் தயாராக இருப்பதுதான் தகுதியுடையவர்க்கு அழகு. உடல் பந்தயக் குதிரைபோல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருந்தால் தான், உயர்ந்த பல காரியங்களை நம்மால் உறுதியாகச் செய்ய முடியும். உலகில் பிறந்த பயனையும் பெறமுடியும். உடலில் உள்ளம் இருக்கிறது. அந்த உள்ளத்தில்தான் தெய்வம் வசிக்கிறது. தெய்வம் வசிக்கும் திருக்கோயிலாம் நமது உடலை, திவ்விய ஒளிமிக்க வீடு போலப் பாதுகாத்து, திருப்பேறடைய நாம் தயாராக இருக்க வேண்டும். இல்லையா அரசே?

சோழன்: ஆகா! அருமையான கருத்து. திறமையான வாதம். புலவர் பெருமானே! இந்தத் தெய்வீகமான கருத்தைத் தமிழிலே கேட்கும் போது, தமிழ் என்றும் தமிழ்தான்! தமிழராக நாம் பிறந்து, இம்மொழியை நாமணக்க, வாய் மணக்கப் பேசி, பேரின்பத்துடனும், பெருமையுடனும் வாழ, முற்பிறப்பில் நாம் மாபெரும் தவம் தான் செய்திருக்க வேண்டும். யாரங்கே...?

(சேவகன் தட்டில் பரிசுப் பொருள்களை ஏந்தி வருகிறான். அந்தத் தட்டை வாங்கிப் புலவரிடம் தந்து)

கன்னித் தமிழ் பாடும் கவிஞரே! கவிதைச் சுவை நாடும் காவலரே! எளியேனின் காணிக்கை. அருள் கூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

புலவர்: (வாங்கியவண்ணம்) வாழிய மன்னா! வற்றாத கடல் போல, வந்திறங்கும் வான் மழைபோல, தமிழ்த் தாயின் தவப் புதல்வராக, பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்...வருகிறேன் மன்னவா...

வாழ்க தமிழ் ! வளர்க தங்கள் புகழ்!

(வணக்கத்துடன் புலவர் செல்வதைச் செம்மாந்த நிலையில் பார்த்துக் கொண்டிருக்கிறார். மறுபுறம் இளவரசன் வேகமாக வந்து நிற்கிறான். சோழன் தன் மகனை வரவேற்கும் பாவனையில் பார்க்கிறார்)

இளவ: தமிழ் என்றும் வாழும். ஆனால் தங்கள் புகழ் என்றும் வாழாது தந்தையே!

சோழன்: வாழ்த்துரையா மகனே?

இளவ: இல்லை. விளக்கவுரை!

சோழன்: யாருக்கப்பா விளக்கம்?

இளவ: விவரம் புரியாதவருக்கு. புரிந்தும் புரியாதவர்

போல் நடிப்பவருக்கு.

சோழன்: அப்படி வாழ்வோருக்கு என்ன கூறினாலும் ஏறாது. எப்படிச் சொன்னாலும் பழைய நிலை மாறாது. சுற்றிச் சுற்றி வரும் செக்கு மாடுதான் அவரின் வழி...சரிதானே?

இளவ: வழியை மாற்றி விட்டால்?

சோழன்: நாய்வாலை நிமிர்த்த முடியுமா? பால் ஊற்றிக் கழுவினாலும் காக்கையின் நிறம் மாறுமா? அவ்வாறு முயற்சி செய்வது அறிவில்லாதவர்கள் வேலை!

இளவ: இல்லாதவர்களை உள்ளவர்களாக மாற்றும் சக்தி என்னிடம் நிறைய இருக்கிறது.

சோழன்: யாருக்கு இல்லை?

இளவ: உங்களுக்கு! இந்த நாட்டின் மன்னருக்கு!

சோழன்: (கோபமாக) என்ன உளறுகிறாய்?

இளவ: உளறவில்லை தந்தையே... உண்மையைக் கூறுகிறேன் எத்தனையோ முறை கேட்டேன். உங்கள் சித்தம் இரங்கவில்லை. இன்று, கடைசியாகக் கேட்கிறேன்.

சோழன்: கேட்பது என்ன?

இளவ: அரசுரிமை... ஆளும் உரிமை!

சோழன்: அது, நான் இருக்கும் வரை உனக்கு வராது.

நானாகக் கொடுப்பது உரிமை...தானகக் கேட்டுப் பெறுவது மடமை.

இளவ: வீணாகப் பிடிவாதம் பிடிப்பது வேந்தருக்கு அழகல்ல.

சோழன்: பெறும் காலம் வரை பொறுமையில்லாமல் துடிப்பது, இளவரசனுக்கு அழகல்ல.

இளவ: காலம் நீடிக்கிறது.

சோழன்: அது காலதேவன் கருணையால்...ஏன்? என்னை இறந்து போகச்சொல்கிறாயா?

இளவ: அவ்வாறு சொல்ல வில்லையப்பா... இப்பொழுதே எனக்கு முடிசூட்டி வைத்துவிடுங்கள் என்கிறேன்.

சோழன்: உனக்குப் பக்குவம் போதாது.

இளவ: உடல் பக்குவமா? மனப் பக்குவமா? இரண்டுமே என்னிடம் நிறைய இருக்கிறது. வேறு என்ன வேண்டும்?

சோழன்: ஆள்கின்ற பக்குவம்...நானாகக் கொடுக்கும் வரை, காத்திருக்கும் மனப்பக்குவம்!

இளவ: மன்னிக்கவும். தானாகத் தராவிட்டால், நானாகவே எடுத்துக் கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

சோழன்: எப்படி?

இளவ: போகப் போகத் தெரியும். (கொஞ்ச தூரம் நடந்து,

பின் திரும்பி வந்து) அப்பா! புலிக்குப் பிறந்தது பூனையாவது இல்லை. பிச்சை எடுப்பதுபோல, அரசு உரிமையைக் கேட்க, நான் ஒன்றும் கோழையும் இல்லை. வீரம் என் குலச் சொத்து...அதன் மூலமே..

சோழன்: போர்க்களத்தில் சந்திக்கத் துணிகிறாயா?

இளவ: துணிகிறேனா?...துணிந்தே விட்டேன். அப்பா! பதவி இல்லையென்றால், பணிவு இல்லை. அப்பா மகன் என்ற கனிவு இல்லை. எந்தக் காலத்துக்கும் நமக்குள் உறவே இல்லை. என்ன சொல்கிறீர்கள்?...

சோழன்: உன் முடிவு நல்ல முடிவு.

இளவ: அப்படி என்றால்...?

சோழன்: ஒப்புக் கொள்கிறேன். மகனே! ஒப்புக் கொள்கிறேன். தப்பிப் பிறந்த மகன் தாண்டுகிறாய். தணிந்து கிடக்கும் என் போர் வெறியைத் தூண்டுகிறாய். தூங்கிக் கிடக்கும் புலியைத் தீண்டுகிறாய். தவம் செய்து பெற்ற மகனே! பாவம் செய்ய என்னைத் தூர்ண்டுகிறாய். பரவாயில்லை. உன் விருப்பம் அதுவானால்...நாம் போர்க்களத்திலே சந்திப்போம்.

நான் ஊட்டி வளர்த்த இதே உடல், உயிருக்கும் மேலாக எண்ணிக் காத்த உடல், கழுகுக்கு இரையாகட்டும்... போ...போய் படையைத் திரட்டு. பலத்தைக் காட்டு. மிரட்டாதே போ.

இளவ: வாய் வீச்சிலே வீரம் வேண்டாம். வாள் வீச்சிலே

காட்டுங்கள். வருகிறேன். (வாசல்வரை சென்று மீண்டும் வந்து) தந்தையே! ஒன்றுமட்டும் நினைவில் வையுங்கள்.

''இந்தப் போரில் நீங்கள் வெற்றி பெற்றாலும்... உங்களுக்குப் பிறகு இந்த நாடு என் கைக்குத்தான். இந்தப் போரில் நான் வெற்றி பெற்றலும் (சிரித்து)... ஆட்சி எனக்கு... அவமானம் உங்களுக்கு. அப்பா... எப்படியும் வெற்றி எனக்குத்தான். வருகிறேன். அப்பா (சிரித்தவாறு போகிறான்...அரசன் முகம் கோபத்தால் சிவக்கப் பேசுகிறார்)

சோழன்: தோல்வியே காணாத தோள்கள்; துரோகிகளின் தலைகளை மிதித்த என் கால்கள்; குறி தவறாத என் வேல்; குத்திக் கிழிக்கும் இந்த வாள்...ம்... வெற்றி யாருக்கென்று விடிந்தால் தெரிகிறது. முடிந்தால் புரிகிறது.

(கையைத் தட்டுகிறார்...சேவகன் உள்ளே வருகிறார்) உடனே அமைச்சரை அழைத்துவா...

(சேவகன் வணங்கியபடி போகிறான்
அரசர் நடக்கிறார்...மகன் கூறிய
வார்த்தைகள் எதிரொலிக்கின்றன.)

''இந்தப் போரில் நீங்கள் வெற்றி பெற்றாலும்... உங்களுக்குப் பிறகு இந்த நாடு என் கைக்குத்தான். நான் வெற்றி பெற்றாலும், ஆட்சி எனக்கு! அவமானம் உங்களுக்கு...''

சோழன்: எனக்கா அவமானம்...எனக்கா அவமானம்... அதையும் பார்த்தே விடுகிறேன். (நடக்கிறார்)

-திரை-

காட்சி 3

இடம்: அரண்மனையில் ஒரு அறை.

உள்ளே: சோழன், கோவூர் கிழார், அமைச்சர்

(உருவிய வாளுடன் கோபமாக நடக்கிறார் மன்னர். அவர் வாய் கோபமான வார்த்தைகளைக் கொட்டுகின்றன.

சோழன்: வளர்த்த கடா மார்பில் பாய்கிறது. இமையே கண்ணைக் கெடுக்க முயல்கிறது. இருக்கட்டும். துள்ளும் சிரத்தை, துடிக்கும் கரத்தை, துண்டித்தே விடுகிறேன்.

(அமைச்சர் உள்ளே வணக்கத்துடன் நுழைகிறார்)

வாருங்கள் அமைச்சரே!

அமைச்சர்: ஏதோ அவசரம் என்று வந்த ஆள் கூறினான்.

சோழன்: ஆமாம், படை திரட்ட வேண்டும். நம் பலத்தைக் காட்ட வேண்டும். நம்மைப் பகைத்தவர்கள் கதியெல்லாம் இதுதான் என்று பாருக்குக் காட்ட

வேண்டும். போங்கள்...போருக்கு ஆகவேண்டியதை எல்லாம் பொறுப்பாக, சிறப்பாகச் செய்யுங்கள்.

அமைச்சர்: யாருடன் போர் மன்னா? நம் பகைவர்களுக்கு அத்தனைத் துணிவு கிடையாதே! புதிதாக ஏதாவது பகையா? எனக்குத் தெரியாமலா?

சோழன்: ஆமாம்... நான் பெற்ற வியாதிதான் இன்று என் உடலை அழிக்கப் புறப்பட்டிருக்கிறது.

அமைச்சர்: வியாதியா?

சோழன்: ஆமாம். குழந்தைகளை செல்வம் என்பார்கள். நான் நோய் என்கிறேன்.

அமைச்சர்: இளவரசருடனா பகை? அவருடனா போர்?

சோழன்: ஆமாம். தவறுக்குத் தரவேண்டிய தண்டனை! (புலவர் கோவூர் கிழார் உள்ளே நுழைகிறார்)

கோவூர் கிழார்: தண்டனை யாருக்கு மன்னவா?

சோழன்: வாருங்கள் கோவூர் கிழாரே! தண்டனை யாருக்கென்று தங்களுக்குத் தெரியாதா?...தவறு செய்பவர்களுக்கு! தருமத்தை அழிப்பவர்களுக்கு! தன்னைப் பற்றி அளவுக்குமேல் நினைத்துக் கொண்டு, ஆர்ப்பாட்டம் செய்யும் அறிவிலிகளுக்கு!

கோவூர்: நீதி அதுதான் மன்னவா! இருந்தாலும், சில

சமயங்களில் நீதி அநீதிபோல் தெரியும். அநீதி நீதி போல் தெரியும்.

சோழன்: அது எண்ணத்தின் கோளாறு.

கோவூர்: எண்ணத்திலே தெளிவு எல்லோருக்கும் இருப்பதில்லை. எப்போதும் கிடைப்பதில்லை. இடம் பார்த்து, தரம் பார்த்து மன்னிப்பதுதான் மன்னவர் கடமை. தவறு செய்வது மனித இயற்கை. தவறு செய்தவன், திருத்திக் கொள்பவன், திருந்தி வாழ்பவன மனிதரில் தெய்வம்.

சோழன்: இங்கு நிலை அப்படி அல்ல புலவரே! கண்ணே முகத்தை அழிக்க நினைக்கிறது. கையே என் உடலைக் கிழிக்க வருகிறது. பெற்ற மகனே என் புகழை, என் நிலையைக் கெடுக்க வருகிறான்!

கோவூர்: சிறியோர் செய்கின்ற பிழைகளை, பெரியோர்கள் பொறுப்பதுதானே முறை!

சோழன்: பொறுப்பது, சிரிப்பது, தடுப்பது எல்லாம் கடந்துபோன நிலை புலவரே! என் அழிவிலே இன்பங் காணத் துடிப்பவன். என் துயரிலே சுகம் காண நினைப்பவன். என் மகனல்ல... மகனாயிருந்தாலும் அவன் என் பகைவன்... பரம விரோதி!

கோவூர்: அது பகையல்ல வேந்தே. பாசத்தின மிகை; நீங்களே நினைத்துப் பாருங்கள். மன்னிக்கவும். நிதானமாக சிந்திக்க வேண்டுகிறேன். தாங்கள்

போர்க்களத்தில் நின்று, வென்று, வாகை சூடி வந்தால்... அது எனக்குப் பெரு மகிழ்ச்சியே! எனக்கு போர்ப்பரணி பாடுகின்ற வாய்ப்பை நீங்கள் அளித்தவராவீர்கள். ஆனால்...

சோழன்: ஆனால் என்ன? அச்சமின்றி சொல்லுங்கள். தயக்கமே வேண்டாம். தாராளமாய் நீங்கள் பேசலாம்.

கோவூர்: சொல்லத்தான் நினைக்கிறேன். ஆனால் எப்படி என்றுதான்...

சோழன்: தமிழ்க் கவிஞரே! புலவர் ஏறே...நீங்கள் வெறும் புலவர் மட்டுமல்ல. என்னரும் நண்பர். எதையும், எப்பொழுதும் எடுத்துக் கூற உமக்குப் பூரண உரிமை உண்டு.

கோவூர்: மறக்கவில்லை வேந்தே. காலங்காலமாய், கன்னித் தமிழுக்கும் அதைக் கற்றார்க்கும் நீங்கள் அளிக்கும் சிறப்பை நான் மறக்கவே இல்லை.

சோழன்: ஏன்? பிறகு என்ன தயக்கம்?

கோவூர்: இல்லை மன்னா...எல்லை கடந்து போவதற்குள் நான் கேட்டே விடுகிறேன். எனக்கு ஒரே ஒரு சந்தேகம் மன்னா?

சோழன்: இந்த நேரத்திலா?...கேளுங்கள்.

கோவூர்: மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்... இதற்கு...

சோழன்: பொருள்தானே? இந்த உலகம் மன்னனால் வாழ்கின்றது!

கோவூர்: அதாவது..

சோழன்: மன்னன் மக்களுக்குக் காவலன்.

கோவூர்: ஆம் அரசே! மக்கள் உடல் என்றால் மன்னன் உயிர். உயிர் இல்லையென்றால் உடல் இருந்தும் புண்ணியமில்லை.

சோழன்: இதற்கா இப்படி ஒர் பீடிகை?

கோவூர்: ஆம் மன்னவா! குடிகள் மன்னனை நம்பியே நிம்மதியாக வாழ்கின்றார்கள். அதாவது மன்னனே மக்களுக்குக் கண்கண்ட கடவுள்.

சோழன்: பழைய கதையைப் பொறுமையாகக் கூறுகின்றீர்கள்.

கோவூர்: ஆம் அரசே! பழமைதான் புதுமைக்கு ஆதாரம். இங்கு நடக்கும் புதுமையால், பழமைக்குச் சேதாரம் வந்தால்... செத்து மடிவது மக்கள்; செந்நீர் வடிப்பது மக்கள்; சிந்திய மூக்கும் அழுத கண்ணீருமாய் சோர்ந்து துடிப்பது மக்கள். உண்மையைச் சொல்கிறேன் மன்னா! போர் என்பது உங்கள் இருவருக்கும் அல்ல... தந்தைக்கும் மகனுக்கும் மட்டுமல்ல! உங்கள் படையிலே உள்ள மக்களுக்கு! தமிழ் வீரர்களுக்கு! சோழ குலத்தை நம்பி வாழும் மக்களுக்கு! அந்த மாவீரர்கள் உங்களுக்காகப் போராடுகின்றார்கள்!

உங்கள் கோபம் தணியும்போது, போர் முடியும். ஆனால், அங்கே மக்கள் உடல்கள் சரியும். பெண்கள் வயிறு எரியும். நாடே சுடு காடாகும்!

சோழன்: நீங்கள் சொல்வது (தடுமாறிய நிலை)

கோவூர்: நாளையக் கதை. இன்றிருப்போர் நாளையில்லை. கூட வருவது பாவமும் புண்ணியமும்தான். பணமும் பதவியும் அல்ல. கேவலம். இந்தச் சிம்மாசனத்திற்குத் தானா சிரம் அறுக்கும் போட்டி ...அதுவும் தரணிபோற்றும் தரமுள்ள தந்தைக்கும் மகனுக்கும் இடையில்...

சோழன்: கோவூர் கிழாரே... (கோபமாக)

கோவூர்: கோபம் வேண்டாம் மன்னா! உங்கள் புகழிலே நீங்களே தீட்டிக் கொள்ளும் கருமை; உங்கள் வரலாற்றிலே நீங்களே எழுதிக்கொள்ளும் வெறுமை; உங்கள் நாட்டிலே நீங்களே ஆழ விதைக்கின்ற வறுமை; உங்கள் மகனையே, நீங்களே அழிக்கின்ற கொடுமை. அப்படி நாடு உழன்றால், உங்கள் மகனை நீங்கள் இழந்தால்... அரசே! இந்த நாட்டுக்கு வாரிசு இல்லை யென்றால்? இந்த நாடு என்னாகும்? சோழர் குலம் என்னாகும்? சோழர் புகழ் என்னாகும்?

சோழன்: புரிகிறது புலவரே! எல்லாம் மண்ணாகும். பொன்னான என் நாடு; கண்ணான என் மகன்; கனிவான மக்கள்; என் கோபத்தால், கதையாகிப் போக நான் விடமாட்டேன்.

வேண்டாம் இந்த அரசு... வேண்டாம். இந்தப் போர் முரசு. வேண்டாம் இந்த பதவி வெறி.

நாடு வேண்டாம்; நலம் வேண்டாம்; பீடு வேண்டாம்; பெருமையும் வேண்டாம்.

எனக்கு வேண்டுவது வீடு - இறைவன் வீடு.

அறிவுக் கண்ணைத் திறந்த கவிஞரே...உறவின் பெருமையை, உயிரின் அருமையைக் காட்டிய புலவரே! வாழ்க பல்லாண்டு!

(அமைச்சரை நோக்கி) அமைச்சரே! படை திரட்ட அழைத்தேன். பகை விரட்ட நினைத்தேன்... எல்லாவற்றிற்கும் இன்று விடை கொடுக்கப் போகின்றேன்.

ஆமாம்...நாடு வெறுத்து, காடு சென்று, என் வாழ்வுக்கு, வீணான அகந்தைக்கு முடிவு கட்டப் போகிறேன். என் ஆசை அழிய, என் ஆவேசம் ஒழிய-- வடக்கிருந்து சாகிறேன்.

அமைச்சரே! போங்கள்..என் மகனை அழைத்து வாருங்கள். முடி சூட்டு விழாவிற்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

வாருங்கள் கிழாரே, போகலாம். (போகின்றனர்)

அமைச்சர்: சுற்றி அடிக்க இருந்த சூறாவளிக் காற்று, சுமுகமாக ஓய்ந்தது. பற்றியெரிய இருந்த பெருந்தீ... பண்பு நீரால் அணைந்தது. ஆமாம்;

பெற்ற பாசத்தையும் மிஞ்சிவிட்டது நாட்டுப் பற்று. நாடு வாழ, தன் வீரத்தை விவேகத்தால் வென்றார் பேரரசர் கோப்பெருஞ்சோழன். வாழ்க அவர் புகழ்!

அவரால் நாடு பிழைத்தது. சோழர் குலம் தழைத்தது.

வெற்றி யாருக்கு?

மக்களுக்குத்தான்! (புன்னகை செய்து கொள்கிறார்)

-திரை-

4. தியாக மைந்தன்!

(மகாபாரதம்)

வேட்டையாடச் சென்ற மன்னன் சச்சந்தன் பரதவக் குலப் பெண்ணைப் பார்க்கிறார்.

விரும்புகிறார் மணந்து கொள்ள...

பெண்ணின் தந்தையோ செம்படவன்...

பட்டத்து உரிமையைத் தன் பேரனுக்குக் கேட்கிறான்.

வேந்தனுக்குத் தரவும் விருப்பமில்லை.

பெண்ணாசையை விடவும் முடியவில்லை.

இரு தலைக் கொள்ளி எறும்பானார் மன்னர்.

தந்தையின் குழப்பத்தைக் கண்டான் மைந்தன்...

தந்தையின் இன்பத்திற்காக, தன்னையே தியாகம் செய்கிறான்.

எப்படி?

4. தியாக மைந்தன்

காட்சி 1

இடம்: ஆசிரமம்

உள்ளே: பரசுராமர், காங்கேயன்

(காங்கேயன் தன் குருவின் முன்னே நின்று வணக்கம் செய்கிறான். பரசுராமர் ஆசி கூறுகிறார்.)

பரசுராமர்: இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்கின்ற சக்ரவர்த்தி-சந்தனு மகாராஜாவின் மைந்தன் நீ. எட்டு வயதில் இருந்தே என்னுடைய மாணவனாக இருக்கின்ற உனக்கு, எந்தவிதக் குறைவும் வராது. தைரியமாய் அரண்மனைக்குப் போ! தந்தை உனக்காகக் காத்திருப்பார்.

காங்: தெய்வத்தின் அவதாரமாகிய தங்களை விட்டுப் பிரிந்து போக, எனக்கு மனமே இல்லை. குருவே! காலமெல்லாம் உங்கள் கூடவே வாழவேண்டும் என்பதுதான் என் கடைசி ஆசை.

பரசு: வாலிபனே! ஆசையே இனிமேல்தான் ஆரம்பமாகப் போகிறது. அதற்குள் முற்றுப் புள்ளி வைக்கிறாயே! வைராக்கியம் மிகுந்தவன் நீ என்று, எனக்கு நன்றாகத் தெரியும். எதைச் செய்தாலும் யோசித்தே செய்பவன் நீ!

காங்: தாயை இழந்த எனக்குத் தாயாகவும், தந்தையைப் பிரிந்த எனக்குத் தந்தையாகவும், குருவாகவும், தெய்வமாகவும் இருந்து வழிகாட்டிய நீங்கள், இனியும் வாழ வழி காட்டவேண்டும்.

பரசு: என்னுடைய ஆசீர்வாதம் உனக்கு என்றும் உண்டு. கருணை மிகுந்த கங்கையின் மைந்தா! காங்கேயா! கவனமாகக் கேள்! கங்கையின்

புனித வெள்ளம் இந்த உலகத்து உயிர்களை எவ்வாறு காக்கின்றதோ, அப்படி அமைய வேண்டும் உன் வாழ்க்கை. உன்னுடைய திறமை எல்லாம் கடமையைச் செய்வதில் தான் இருக்க வேண்டுமே தவிர, உரிமையைப் பெறுவதற்காகப் பயன்படக் கூடாது.

காங்: அப்படியே செய்கிறேன் மகரிஷியே! உங்களைப் பிரிந்து வாடும் உள்ளத்திற்கு, வலிமையைத் தாருங்கள். நான் எனது நாட்டை ஆளவேண்டிய வழியினைக் கூறுங்கள்.

பரசு: அரசாளப் பிறந்த மகனே! பணிவிடையால், கனிமொழியால், அன்பு சொல்லால், ஆதரவு செயலால், மன வலிமையால் என்னைக் கவர்ந்த மாவீரனே! தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை. இதை மறவாமல் செயல்படு! வேதங்களைக் கற்ற நாதமூர்த்தி போல விளங்கும் உனக்கு, நான் என்ன கூறப் போகிறேன்?

காங்: நாட்டு வாழ்க்கை எனக்குப் புதிது.

பரசு: இந்த உலக வாழ்க்கையும் அப்படித்தான்.

காங்: வாழ்க்கையே எனக்குப் புரியவில்லை!

பரசு: அது நம்மை ஆட்டி வைக்கும் இறைவனைப் போல!

காங்: இறைவனையும் எனக்குப் புரியவில்லையே?

பரசு: இறைவன் வேதங்களிலே மறைந்து கிடக்கிறான்.

மனித உருவங்களிலே மகிழ்ந்து நடக்கிறான். உயிர்கள் இடத்தில் அன்பு காட்டு. உதவி செய். உன் கடமையை ஆற்று. இறைவன் உன்னிடமே வருவான்; என்றும் வாழ்வான்.

காங்: நன்றி குருதேவா! என்னுடைய வாழ்க்கை, தாங்கள் கூறியதுபோலவே இருக்கும். ஞான தீபத்தை ஏற்றி வைத்த தலைவா! குருதேவா! என்னுடைய வணக்கங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். (காலடியில் விழுகிறான்)

பரசு: (அவனைத் தூக்கி நிறுத்தி) இந்தப் பரசுராமனின் மனங் கவர்ந்த பண்புத் திலகமே! வைராக்கியத்தின் சிகரமே! எழுந்திரு, வாழ்வு உனக்காகக் காத்திருக்கிறது. வெற்றிமேல் வெற்றி பெற்று வாழ்க! வளர்க!!

-திரை-

காட்சி 2

இடம்: அரண்மனையில் ஒரு அறை.

உள்ளே: சந்தனு மகாராஜா, அமைச்சர், சேனாதிபதி, சேவகன், காங்கேயன்.

(அமைச்சரும், சேனாதியும் நின்று கொண்டிருக்க, அங்கே மகாராஜா கோபமாகப் பேசுகிறார்)

சந்தனு: என்ன வேண்டும் உங்களுக்கு? ஏன் என்னை சித்திரவதை செய்கின்றீர்கள்? கொஞ்ச நேரங்கூட தனியே விடாமல் கொல்கின்றீர்களே? நன்றாய் இருக்கிறதா உங்களுக்கு?

முன் செய்த பாபமோ! யார் இட்ட சாபமோ! நான் தினம் தினம் வேதனையில் வெந்து சாகிறேன். வெளியே சொல்லவும் முடியவில்லை. என் மனதை வெல்லவும் முடியவில்லை. ஏன் வந்தீர்கள் இங்கு?

அமைச்சர்: கொலுமண்டபத்திற்குக் கூடத் தாங்கள் வரவில்லையே என்ற குறை எங்களுக்கு! அரச காரியங்கள் அத்தனையும், அரை குறையாக நிற்கின்றனவே என்ற அவசரம் எங்களுக்கு!

சேனாதி: இந்த நிலையிலே தங்களைக் காணும் பொழுது, என்ன செய்வதென்றே புரியவில்லை!

சந்தனு: புரியவில்லை என்று தானே புலம்பிக் கொண்டிருக்கின்றேன். தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறவன் தலையைப் பிடித்து, அழுத்திக் கொண்டு, காப்பாற்றுகிறேன் என்று கதறுவோர் போல் இருக்கிறது உங்கள் வழக்கு. அமைச்சரே! மூளைக்கு வேலை கொடுங்கள். ஏதாவது பட்டால் சொல்லுங்கள். இல்லையேல் என் முகத்தில் விழிக்காது எங்கேயாவது போங்கள்.

அமைச்சர்: யோசித்துக் கொண்டுதான் இருக்கிறோம் மகாராஜா. ஆனால், இது சிக்கலான பிரச்சனை என்பதால்தான்...

சந்தனு: சுலபமான பிரச்சனை என்றால், உங்களை ஏன் நான் கேட்கிறேன்? இதோ பாருங்கள்! இன்னும் இரண்டு நாள் தவணை தருகிறேன். வழி ஏதாவது இருந்தால் என்னிடம் வாருங்கள்...

அமைச்சர்: மகாராஜா!...தனியொருவர் பிரச்சனை என்றால் எளிது. இது சாம்ராஜ்யத்தையும், அதன் வாரிசையும் பாதிப்பதால்தான், முடிந்தவரை யோசிக்கிறோம். முடியாமல் பின்வாங்குகிறோம்.

சேனாதி: எப்படி யோசித்தாலும், யாராவது ஒருவர் பாதிக்கப்படுகின்றார். முள்ளிலே விழுந்த துணியை மெல்ல எடுப்பது போல்தான்...

சந்தனு: அதற்குள் என் ஆசை முடிந்து, ஆர்வம் குலைந்து, ஆனந்தம் மறைந்து, அத்தனையும் ஓய்ந்து விடும். வேடிக்கையாக வேட்டைக்குப் போன எனக்கு, இப்படி ஒரு வேதனையா?... என் நிம்மதியைக் குலைக்க இப்படி ஒரு சோதனையா?...

இங்கே இருக்கும் யாருக்கும் என்மேல் அக்கறையே இல்லை.. உதவி செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி கூட எவருக்கும் இல்லை. நான் அள்ளி வீசும் பொற்காசுகளுக்காக, ஏதோ பேசும் ஏமாற்றுக் காரர்கள் நீங்கள்!

இருவரும்: அரசே...(பதட்டத்துடன்)

சந்தனு: ஆத்திரப்படவேண்டாம். என் ஆத்திரம், அவசரம் அப்படி. இந்தக் குழப்பம் என்று தீருமோ... என்று மாறுமோ...

(சேவகன் உள்ளே வணக்கத்துடன் வருகிறான்) என்ன வேண்டும் உனக்கு?

சேவகன்: மகாராஜா... இளவரசர் உங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார்.

சந்தனு: நீ போகலாம். (சேவகன் போகிறான்) அமைச்சரே! என் மகன் காங்கேயன், இந்த நாட்டு இளவரசன் இன்று வருகிறான் என்பதைக் கூட என் சஞ்சலத்தில் மறந்து போனேனே! ம்...அவன் முகத்தில் எப்படித்தான் விழிக்கப் போகிறேனோ?

காங்: (காங்கேயன் உள்ளே வந்து) அப்பா!...

(தந்தையை வணங்குகிறான். தந்தை தழுவிக் கொள்கிறார். அவர் முகத்தைக் காங்கேயன் பார்க்கிறான்)

சந்தனு: காங்கேயா! (தழுவிக் கொண்டு, கண்ணீரைத் துடைக்கிறார்)

காங்: அப்பா! என்ன கண்ணீர்?

சந்தனு: ஆனந்தக் கண்ணீர் மகனே! வேறொன்றுமில்லை.

காங்: மன்னிக்க வேண்டும் அப்பா! வாட்டமுடன் இருப்பது போல உங்கள் முகம் காட்டுகிறதே!

சந்தனு: இல்லை...இல்லை... அரசாங்கத் தொல்லை... அதனால்தான் இப்படி. சரி, காங்கேயா! மகான் பரசுராமர் எப்படி இருக்கிறார்? வரும்போது

பயணம் இனிதாக இருந்ததா?

காங்: குருதேவர் நலமே... பயணமும் இனிதே... அப்பா! நான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறவில்லையே!

சந்தனு: எனக்கென்ன குறை மகனே! நன்றாகவே இருக்கிறேன் நான்.

காங்: அமைச்சரே! அப்பா முகத்தைப் பாருங்கள்... அவர் கூறுவது உண்மையா, இல்லை நான் கூறுவது உண்மையா என்று நீங்களே கூறுங்கள்?

சந்தனு: காங்கேயா! உனக்கு ஓய்வு தேவை. நீ போ... பிறகு பேசிக் கொள்ளலாம்.

காங்: மன்னிக்க வேண்டும் தந்தையே... என்ன காரணம் என்று...?

சந்தனு: தலைக்கு மேல் வளர்ந்து விட்டாய். கலைகள் வேறு கற்றுக் கொண்டிருக்கிறாய். அதனால் தான் வந்ததுமே வாதம் செய்கிறாய். உன்னிடம் நான் வீண் அதிகாரம் செய்ய விரும்பவில்லை. உன் விருப்பம் போல நடந்து கொள்ள உனக்கு உரிமை உண்டு. நீ இங்கே இரு... நான் வருகிறேன்.

(மன்னர் போகிறார். பின்னால் அப்பா அப்பா என்று அழைத்தவாறு காங்கேயன் போகிறான்)

அமைச்சர்: இளவரசே! இளவரசே!...

காங்: என்ன அமைச்சரே!... (திரும்பி வந்து)

அமைச்: தந்தையைப் போகவிடுங்கள். அவருக்குத் தேவை, இப்பொழுது தனிமை.

காங்: காரணம்...

அமைச்: இருக்கிறது. ஆனால்! ...

காங்: தயக்கமென்ன அமைச்சரே! தாராளமாய் கூறலாம்!

சேனாதி: சொன்னால்...அந்தச் சேதி உங்களைப் பாதிக்கும்.

காங்: புண்ணை மூடி வைத்தால் புரையோடிப் போகுமே தவிர, ஆறிப் போகாது. தீர்க்க வேண்டிய பிரச்சனையைத் தீர்க்க முயல்வதுதான் வீரம். பயந்து ஒடுவது கோழைத்தனம்.

அமைச்: அறிந்தபின் ஆத்திரப் படுவீர்கள்...

சேனாதி: வருத்தப் படுவதற்கும் வாய்ப்புண்டு.

காங்: எப்படி இருந்தால் என்ன! என்றாவது ஒரு நாள் தெரியத்தான் போகிறது. முன்னால் நீங்கள் கூறிவிட்டால், பின்னால் நிகழ்வதை என்னால் நிச்சயம் தடுக்க முடியும்...

சேனாதி: ஆனால்... ஒரு வேண்டுகோள்!

அமைச்: எக்காரணத்தை முன்னிட்டும் தங்கள் தந்தையிடம், நாங்கள் கூறியதாகக் கூறக் கூடாது.

காங்: மாட்டேன்... என்னுடைய குருதேவர் ஆணையாகத் தந்தையிடம் இது பற்றிக் கேட்கவே மாட்டேன்.

(அமைச்சர் அவனது காதில் சில செய்திகளைக் கூறுகிறார். கேட்டுக் கொண்ட காங்கேயன், ஒரு முடிவுக்கு வந்தவனாய் அங்கிருந்து புறப்படுகிறான். அமைச்சரும் சேனாதிபதியும் அமைதி கொண்டவர்களாக அங்கே நிற்கின்றனர்.)

-திரை-

காட்சி 3

இடம்: குடிசை

உள்ளே: செம்படவன், காங்கேயன், சந்தனு, அமைச்சர், சேனாதிபதி.

(செம்படவன் வாசலில் அமர்ந்திருக்க, காங்கேயன் அங்கே வருகிறான். பெரியவருக்கு வணக்கம் செய்கிறான்.)

காங்: வணக்கம் பெரியவரே!

செம்ப: (குழப்பத்துடன்) வணக்கம்... நீங்கள் யாரென்று...

காங்: உங்களுக்குப் புரியாது... விவரம் புரியாத சிறு

வயதிலே தாயை இழந்தவன். இத்தனை ஆண்டுகளாக இந்த நாட்டை விட்டு அகன்று, காட்டிலே வாழ்ந்தவன். என் பெயர் காங்யேன்.

செம்ப: புரியவில்லை...மன்னிக்கவும். (குழப்பத்துடன்.)

காங்: யாரென்று புரிய வைக்கிறேன். முதலில் என் தந்தை இங்கே வந்தார். அவர் விருப்பம் நிறைவேறவில்லை! இன்று அவரது மகன் வந்திருக்கிறேன். என் விருப்பமாவது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையால், இப்போது புரிந்திருக்குமே!...

செம்ப: இல்லையே (யோசனையுடன்)

காங்: உங்கள் நினைவாற்றல் இவ்வளவு விரைவில் மாறிப்போகும் என்று நான் நினைக்கவே இல்லை. இந்த நாட்டை ஆளும் சக்கரவர்த்தி, இந்த இடத்திற்கு வந்து போனதை, வந்து நொந்து போனதை, இவ்வளவு சீக்கிரம் மறந்திருப்பீர்கள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. இப்பொழுது புரிந்திருக்குமே!

செம்ப: ஆமாம்...அவருக்கு...

காங்: ஆமாம்...அவருக்கு...ஒரே ஒரு மைந்தன். அரசுக்கும் ஒரே ஒரு வாரிசு...எனக்கு முன் பிறந்தவர்கள் எல்லாம், இந்தக் கங்கையிலே வீசி எறியப்பட்டார்கள். ஆகவே, நான்தான் வாரிசு. என்பெயர் காங்கேயன்.

செம்ப: வணக்கம் இளவரசே... இப்படி அமருங்கள்.

காங்: அவ்வளவு மரியாதை வேண்டாம் பெரியவரே! இளையவன் நான். இந்த வாழ்க்கைக்குப் புதியவன் நான். எனக்கு ஒரு சிறு வரம் வேண்டும்! தருவீர்களா?

செம்ப: ஏழை செம்படவன் நான். கங்கைக் கரையோரத்திலே, குடிசையிலே குடியிருக்கும் ஏழை செம்படவன் நான்.

காங்: ம்...அழகான ஒரு பெண்ணை...மன்னிக்கவும்... அழகான என் அன்னையைப் பெற்ற தாங்களா ஏழை? இருக்கவே இருக்காது...சொன்னால் உலகம் பொறுக்காது.

செம்ப: என் மகளா?...அன்னையா!...உங்களுக்கா!... (வியப்புடன்)

காங்: ஆமாம்... வேட்டையாட இங்கே வந்த என் தந்தை, உங்கள் மகளை, இங்கே தான் சந்தித்தார்களாம். உங்கள் மகளை மனைவியாக்கிக் கொள்ள விரும்பினார்களாம். ஆனால்...நீங்கள் தான் தர மறுத்து விட்டீர்களாம். ஏன்?...

செம்ப: முழு விவரமும் உங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்.

காங்: உண்மைதான் நீங்களே சொல்லுங்கள்... நிதானமாகவே சொல்லுங்கள்.

செம்ப: இளவரசே! இது எங்கள் வாழ்க்கைப் பிரச்சனை...உங்கள் மேல், உங்கள் தந்தை,

எவ்வளவு ஆசையும் பாசமும் வைத்திருக்கிறாரோ, அந்த அளவு ஆசையும் பாசமும் நான், என் மகள் மேல் வைத்திருக்கிறேன்.

காங்: எனக்கு நன்றாகப் புரிகிறது.

செம்ப: உங்கள் எதிர் காலத்தை, உங்கள் தந்தை விரும்புவது போல, என் மகளுடைய நல் வாழ்க்கையை நானும் விரும்புகின்றேன்.

காங்: உண்மைதான். உலகத்திற்கு நீதி ஒன்றுதான்.

செம்ப: பிறருடைய இன்பத்திற்காக, என்னுடைய மனக்கோட்டை இடிந்து போக, நான் விரும்ப வில்லை. பிறருடைய மனதைப் புண்படுத்த வேண்டும் என்பது, என் ஆசையுமில்லை.

காங்: உங்கள் உள்ளம் சரிதான்.

செம்ப: அவ்வளவுதான். இனிமேல் நான் எதுவும் கூறப் போவதில்லை.

காங்: ஐயா பெரியவரே! பாதியிலே நிறுத்தி விட்டீரே! மீதியைக் கூறினால்தானே உங்கள் உள்ளம் புரியும்...

செம்ப: உள்ளம் புரிந்தாலும், உலகம் தெரிந்தாலும், உங்களால் ஒன்றும் ஆகப்போவதில்லை!

காங்: இளைஞன்தானே, என்று ஏளனமாக எண்ணி விட்டீர்!

செம்ப: வாயால் வீரம் பேசுவது மிகமிகச் சுலபம்!

காங்: செயலிலும் வீரம் காட்டமுடியும். அந்தப் பரம்பரையில் பிறந்தவன் நான்!

செம்ப: செய்யமுடியாமல்தானே உங்கள் தந்தை ஒடி விட்டார்!

காங்: செய்ய முடியும் என்று தானே ஒடி வந்திருக்கிறேன். சேதியைச் சொல்லுங்கள். சத்தியமாகச் செய்கிறேன். சொன்னது போல் செய்து முடிக்கா விட்டால், நான் கற்ற கலவி, பெற்ற கலைகள், உற்ற பெருமை எல்லாம் மண்ணோடு மண்ணாகி மறைந் தொழியட்டும்!

செம்ப: ஆத்திரப் படவேண்டாம் இளவரசே! இதுதான் என் முடிவு. என் மகளுக்குப் பிறக்கின்ற குழந்தை, இந்த நாட்டின் மகுடத்திற்கு வாரிசாக வரவேண்டும். அவ்வளவுதான்.

காங்: வாரிசா... (தயக்கமாக)

செம்ப: வாரிசுதான். பின் வாங்க வேண்டாம். என் மகளை, உன் தந்தை யணந்தால், அவர்களுக்குப் பிறக்கும் மகன், என் பேரன், இந்த நாட்டிற்கு வாரிசாக வர வேண்டும். அவ்வளவு தான்.

காங்: வாரிசாக வர முடியா தென்றால்?...

செம்ப: என் மகள் பற்றிய பேச்சே வேண்டாம். பேச ஒன்றுமில்லை. இனி நீங்கள் போகலாம்.

காங்: போக வரவில்லை பெரியவரே! உங்களுக்குள்ள

அந்த வைராக்யம் எனக்கும் உண்டு. நீங்கள் கூறிய எல்லா சேதியும் எனக்கு முன்னமே தெரியும்.

செம்ப: தெரிந்து கொண்டா கேட்டீர்கள்?

காங்: ஆமாம்... என் தந்தையின் முகத்தைப் பார்த்தேன். எங்கள் அமைச்சரின் வார்த்தைகளைக் கேட்டேன். தீர விசாரிக்க வேண்டாமா?... அது தானே முறை. இல்லையா தாத்தா?... தாத்தா... இப்படி அழைக்கும் உரிமை எனக்கு உண்டு என்று நினைக்கிறேன்.

செம்ப: உரிமை, உறவு என்று பேசுவதினாலே என் உள்ளம் மயங்கி விடாது. எனக்கு வேண்டியது ஆளும் உரிமை. நீ அழைக்கும் உரிமையல்ல.

செம்ப: வெறும் பேச்சு நேரத்தை வீணாக்கும்.

காங்: ஆமாம். இனி வீணாகப் பேச வேண்டாம். இதோ! ஆளும் உரிமையை உங்கள் வருங்காலப் பேரனுக்கு அளிக்கிறேன். இந்த மண்ணும், விண்ணும், என் மாதா கங்கையும் அறியச் சத்தியம். என் உரிமையை, என் இளைய சகோதரனுக்கு அளிக்கிறேன்.

செம்ப: நீங்கள் அளிக்கலாம்...

காங்: சந்தேகம் வேண்டாம். தாராளமாகக் கூறலாம்.

செம்ப: நீங்களும் அளிக்கலாம். உங்கள் தந்தையும் சம்மதிக்கலாம். ஆனால், உங்கள் மகன் இந்தப்

பட்டத்திற்குப் போட்டி போடலாம் அல்லவா! அப்பொழுது, உங்கள் வாக்குறுதி பொய்த்துப் போகுமே?

காங்: ஆமாம்...மறந்தே போனேன். என் வாக்குறுதி பொய்க்கக் கூடாது. என்னுடைய வாரிசு, வழக்காட வந்து விடக் கூடாது. இந்தப் பட்டத்திற்குப் போட்டியே வரக்கூடாது. அதற்கு ஒரே வழி...எனக்கு சந்ததியே வரக்கூடாது.

தாத்தா... சத்தியமாகக் கூறுகிறேன். இனி, நான் எந்தப் பெண்ணையும் மனதாலும் நினைக்க மாட்டேன்; கரத்தாலும் தீண்ட மாட்டேன்.

என் தந்தையின் துன்பம் தீர வேண்டும். இன்பம் காண வேண்டும். இதுதான் என் லட்சியம். நிறை வேறுவது நிச்சயம்.

செம்ப: அதாவது...

காங்: இந்த இலட்சியத்திற்காக, திருமணமே செய்து கொள்ள மாட்டேன். இந்த வைராக்கியம் என் வாழ்நாள் முழுதும் நீடிக்கும். உங்கள் வளமான பரம்பரையை வாழ்விக்கும். கடைசிவரை, உங்கள் இனத்தை, நமது குலத்தை இந்தக் கரங்கள் காக்கும். நிச்சயமாக, சத்தியமாக.

(செம்படவன் கைகளிலே சத்தியம் செய்கிறான்.)

(அசரீரீ ஒலிக்கிறது)

பீஷ்மா...!

(அரசரும், அமைச்சரும், சேனாதிபதியும் ஓடிவருகின்றனர். காங்கேயனும் செம்படவனும் மேல் நோக்கிப் பார்க்கின்றனர்.)

பீஷ்மா! பெற்ற தந்தையின் துயர் தீர்த்த புண்ணியா! இனி உன்னை வைராக்கியம் மிகுந்த பீஷ்மர் என்றே இவ்வையகம் வழங்கும். வாழ்க உன் பெருமை! வெல்க உன் கடமை!

(தந்தையை நோக்கி, பீஷ்மர் ஓடிவந்து காலில் வீழ்ந்து வணங்குகிறார்)

சந்தனு: மகனே...எனக்காகவா இந்தத் தியாகம்...!

காங்: அப்பா!...

சந்தனு: பீஷ்மா!...

(இருவரும் தழுவிக் கொள்கின்றனர்)

-திரை-

5. கண்ணன் வந்தான்!

(மகாபாரதம்)

வனவாசம் செய்த பாண்டவர்கள் மனம் மாறியிருப்பான் துரியோதனன் என்று எண்ணி உலூக முனிவரைத் தூது அனுப்புகிறார்கள்.

தூது தோல்வியடைகிறது.

என்ன செய்வது என்று அவர்கள் ஏங்கும் போதுதான் கண்ணன் அங்கே வருகிறான்; காட்சி தருகிறான். தூது போகிறான் பாண்டவவரின் சார்பாக.

தூது வழக்கம் போல் தோல்வியைத் தழுவிக் கொள்கிறது.

போர்தான் முடிவென்று கண்ணன் வருகிறான்.

போர்க்களம்-அருச்சுனன் போரிட இயலாது குழம்புகிறான். அங்கேதான் கீதை பிறக்கிறது. கேட்ட இதயம் சிலிர்த்தெழுகிறது.

அதன் பிறகுதான் தருமம் வாழ்கிறது. பாரதம் வளர்கிறது.

5. கண்ணன் வந்தான்

காட்சி 1

இடம்: துரியோதனன் சபை.

உள்ளே: துரியோதனன், கர்ணன், சகுனி, உலூக முனிவர்.



(துரியோதனன் சபைக்குள் நுழைய, காவலன் கட்டியம் கூறுகிறான்)

காவலன்: ராஜராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜ குலதிலக, ராஜகம்பீர, வீர தீர, பாம்புக் கொடியோன், பார் புகழும் வெற்றிவேந்தன், துரியோதன மகாராஜா வருகிறார்...

(அரசன் உள்ளே நுழைகிறான். எல்லோரும் எழுகின்றனர். துரியோ தனன் இருக்கையில் அமர்கிறான். காவலன் உள்ளே வந்து)

காவலன்: அரசே! வணக்கம். முனிவர் ஒருவர் வந்திருக்கிறார். தங்களைக் காண வேண்டுமாம்... காத்திருக்கிறார் தங்கள் உத்தரவுக்காக.

துரியோ: வரச்சொல்! (சபையை ஒருமுறை கம்பீரமாகப் பார்க்கிறான்... உலூக முனிவர் உள்ளே நுழைகிறார். எழுந்து அவரை வரவேற்கிறான்) உலகம் போற்றும் உலூக முனிவரே! வாருங்கள்...தங்கள் வரவால் இந்த சபை புனிதமடைகிறது. அடியேன் செய்த பாக்கியம், ஐயனின் வருகை!

முனிவர்: மகிழ்ச்சி மன்னவா! மகிழ்ச்சி...தங்களின் வாழ்த்துக்கும், மனங் கனிந்த வரவேற்புக்கும் மிக்க நன்றி. வாழ்க பல்லாண்டு!

துரியோ: திடீரென்று வருகை தந்திருக்கின்றீர். இன்பத்தால் திகைத்தே போய் விட்டேன்...தேவை எதுவென்று கூறினாலும்...

முனிவர்: தேவை எனக்கல்ல மன்னா... பாண்டவருக்கு.

சகுனி: தேவைப்படுவது பாண்டவருக்கா...என்ன சொல்கிறீர்கள்! நீங்கள்!...

முனிவர்: சகுனி அவர்களே... நான் இப்போது இங்கே துறவியாக விரவில்லை. ஒரு தூதுவராக வந்திருக்கிறேன். பஞ்ச பாண்டவர்களின் பிரதிநிதியாக...

கர்ணன்: (கேலியாக) தங்கள் கோலமே பஞ்சை...பஞ்சை பாண்டவர்களுக்குத் தூதுவராமல், பின் பலசாலிக்கா வரமுடியும்? வேடிக்கையாக இருக்கிறது! விலாப் புடைக்கச் சிரிக்க வேண்டும் போல் தோன்றுகிறது எனக்கு!...

முனிவர்: கர்ணா...சிரி...சிரிப்பையும் சிந்தனையையும் அடக்கவே கூடாது. என் கோலம் இப்படி இருக்கலாம். பாண்டவர்களின் காலமும் பஞ்சையாக இருக்கலாம். ஆனால் கொள்கை அப்படி அல்ல. காலமும் ஒரு நாள் மாறலாம் கர்ணா, பாண்டவர்களின் துன்பமும் நாளைக்கே தீரலாம்.

துரியோ: வீண் கற்பனை முனிவரே! வெறும் நப்பாசை. கதையைக் கேளுங்கள், நான் கூறுகிறேன். அவர்கள் வாதுக்கு வந்தார்கள். தோற்றார்கள். சூதுக்கு வந்தார்கள்...தோற்றார்கள்; இன்று தூதுக்கு...(ஏளனமாகச் சிரித்துவிட்டு) வழக்கம் போல் தோல்விதான்.

முனிவர்: மன்னா! தோல்விதான் வெற்றியின் படிகள்...மனசாட்சிக்குப் பயந்து, மன்னவராக இருந்து, முடிவு செய்யவேண்டும் மன்னா... இனி நான் சொல்ல வந்ததைச் சொல்லட்டுமா?...

துரியோ: நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். நான் செய்ய வேண்டியதைச் செய்கிறேன்.

முனிவர்: 12 ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து, ஓராண்டு உருவம் தெரியாது மறைந்து வாழ்ந்த பாண்டவர்கள். உங்கள் சகோதரர்கள், தங்களுக்குச் சேரவேண்டிய நாட்டைக் கேட்கச் சொன்னார்கள்...

சகுனி: கேட்டார்களா பாண்டவர்கள்?....(சிரிப்புடன்) அந்த ஆண்டவனே வந்து கேட்டாலும் முடியாதே... ஆண்டிபோல அலைந்து திரிந்தவர்களுக்கு. அரசாட்சி வேண்டுமாம், அரண்மனை வேண்டுமாம், ஆடம்பர வாழ்வு வேண்டுமாம்... ஆசையைப் பாருங்கள்!... எங்கேயாவது போகச் சொல்லுங்கள் வேலை செய்து பிழைக்க!

முனிவர்: வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். வனவாசத்திற்குப் பிறகு, அவர்களுக்கு நீங்கள் தருவதாகச் சொன்ன நாடு...

கர்ணன்: நாடா? ஏது நாடு?...கடலில் கலந்து விட்ட பிறகு ஆறாவது நீராவது!... நாட்டை அடகு வைத்துத் தோற்று விட்டு, நாடு கிடைக்கும் என்று நாக்கைத் தொங்கப் போடும் நப்பாசை எதற்கு?

நாணயமில்லாதவர்கள், நடத்தை கெட்டவர்கள்!

முனிவர்: இப்படிச் சொல்வது நல்லது இல்லை. உங்கள் தகுதிக்கும் ஏற்றதில்லை. இது தருமமும் இல்லை. பெருமையும் இல்லை.

துரியோ: இனிமேல் எனக்குப் பொறுமையும் இல்லை. தூதுவர் என்பதால் சாதுவாக இருக்கிறேன். என்ன மாமா?...இல்லையா கர்ணா?... இல்லையேல், தோள் துடிக்கும்...வாள் ஒலிக்கும், பேசியவரின் உடல் தூள் பறக்கும். ஆமாம் முனிவரே! நீங்கள் வந்தவேளை நல்லவேளை. பொறுமையாகக் கூறுகிறேன்.... போய்வாருங்கள்!

முனிவர்: துரியோதனா...இதுதான் உன் முடிவா?...

துரியோ: ஆமாம்... வாய்முனையில் நாடில்லை... வேண்டுமானால் போர்முனையில் பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள்...நீங்கள் போகலாம்...சபை கலையட்டும்...(போகிறான், முனிவர் திகைத்து நிற்கிறார்)

-திரை-

காட்சி 2

இடம்: நாட்டுக்கு வெளியே...

உள்ளே: தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், பாஞ்சாலி, கண்ணன்.

அருச்சு: தூது சென்ற முனிவரைத் தூக்கியெறிந்து பேசியிருக்கிறான் துரியோதனன்...என்ன அகம்பாவம் இருந்தால் இப்படிப் பேசியிருப்பான்?

பீமன்: வாய் கொழுத்த வீணனை, நாயைப் போலக் கிழித்தெறிய வேண்டும். பேயாட்டம் போடுகிறானா பித்தன்?...பார்க்கிறேன் ஒருகை.

தருமன்: அமைதி தம்பிகளே...அமைதி! ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு. ஆண்டுகள் பதின்மூன்றை அனுபவித்து விட்டோமே... ஆராய்வதற்குள்ளாகவா இத்தனை ஆத்திரம்....இந்த நேரத்தில் இங்குக் கண்ணன் வந்தால் எப்படி இருக்கும்?...

பாஞ்சாலி: அதோ அண்ணன் வந்து விட்டார்...ஆயுசு நூறுதான்.

தருமன்: (எல்லோரும் வணங்குகின்றனர்) வா கண்ணா வா! நினைத்தேன், வந்து விட்டாய்!

கண்ணன்: ம் ஹூம். நான் வரும்போது தான் நினைத்திருக்கிறாய்....ஆமாம்...ஏதோ நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது இடையிலே

வந்து விட்டேன் போலிருக்கிறதே... இல்லையா?...

தருமன்: அப்படி ஒன்றும் இல்லை.

கண்ணன்: பேசுகின்ற வாய், வார்த்தையை மறைத்தாலும், பிரகாசிக்கும் முகம் அழகாகக் காட்டி விடுமே... என்ன நேர்ந்தது? ஏன் இப்படிக் குழப்பத்துடன் காணப் படுகின்றீர்கள்? என்ன காரணம்?

நகுலன்: எல்லாம் வல்ல உங்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ?

கண்ணன்: சொன்னால்தானே புரியும்...அதுதானே முறை!

பீமன்: முறையைச் சொல்லட்டுமா? எங்கள் குறையைச் சொல்லட்டுமா? 13 ஆண்டுகள் காட்டில் வாழ்ந்த எங்களை, வாவென்று வரவேற்கவோ, இந்தா என்று நாட்டைக் கொடுக்கவோ யாருமேயில்லை. அதற்குப் பதில்---ஏதேதோ பேசுகிறான், ஏசுகிறான் துரியோதனன். என்ன திமிர் இருந்தால்?

அருச்சு: அந்தத் திமிரை நான் அடக்குகிறேன். நெஞ்சாரப் பொய் சொல்லி, வஞ்சகமாய் ஏமாற்றி, எங்கள் உரிமையைப் பறித்த, பெருமையை அழித்த அந்தக் கௌரவப் பதர்களின் திமிரை நான் அடக்குகிறேன்!

கண்ணன்: அடக்கம் பேச்சில் இருக்க வேண்டும். வீரம் செயலில் இருக்கவேண்டும். இல்லையா சகாதேவா?

சகா: ஆம் மகாதேவா! நீதி இல்லாத இடத்தில் நியாயம் இல்லைதான். சாக்கடையிலே சந்தன வாடையை எதிர் பார்ப்பது போல, அற்பர்கள் இடத்திலே அறிவுடைமையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? வீரமும் விவேகமும் எங்களிடம் நிறைய இருக்கிறது. இருந்தும்...

கண்ணன்: வீரமும் வெற்றியும் ஒன்றாகப் பிறந்தவைகள். இருந்தாலும், அவை ஒன்று சேரக் காலமும் நேரமும் வேண்டாமா?

பீமன்: நான் சேர வைக்கிறேன். உத்திரவு தாருங்கள். வீரம் பேசும் வாயைப் பிளந்து, மண்ணோடு மண்ணாக மக்கிப் போகும் அளவு நான் மாற்றி வைக்கிறேன். எங்கள் வாழ்க்கைத் தீபத்தை ஏற்றி வைக்கிறேன்.

கண்ணன்: ஆத்திரப்படுவதால் பயனில்லை...

தருமன்: அமைதியாகவே இருப்போம். காலதேவன் கண் விழிப்பான். காரியம் கைகூடும்.

பாஞ்சாலி: எதுவரையில் காத்திருப்பது? என் நிலையைப் பாருங்கள், அண்ணா! எனக்கு ஒரு வழி கூறுங்கள்! அவிழ்ந்து கிடக்கும் என் கூந்தலை அள்ளி முடிப்பது எப்போது? அன்று இட்ட சபதம் நிறைவேறுவது எப்போது? துகில் உரிந்த துரியோதன் திமிர் அழிவது எப்போது?

அருச்சு: வில்லெடுத்து நாணேற்றி வீரமுடன் பாணம் விட்டால், வீழாதா பகைவர் தலை? அழியாதா

அவர்கள் நிலை? அம்பைப் பூட்டட்டுமா? ஆண்மையைக் காட்டட்டுமா?

கண்ணன்: அர்ஜுனா! பொறுத்தவர் பூமியாள்வார்...

பீமன்: பொறுத்துத்தானே வாழ்ந்தோம்-புலியாகவா பாய்ந்தோம்? -பொறுத்துத்தானே வாழ்ந்தோம்-பூமியையா ஆண்டோம்?-கண்ணா? காட்டிலே இத்தனை நாள் மாண்டோம். சூதாடி, வாதாடி சொக்கட்டான் காயாடி, சூழ்ச்சியிலே வாழ்ந்த துரியோதனன்-- கோபத்தால் நாடாண்டான்--நாங்கள் பொறுத்தே காடாண்டோம்.

தருமன்: என்னைப் பொறுத்த வரையில், பொறுமைக்கு என்றும் அழிவே இல்லை.

அருச்சு: அழிவு பொறுமைக்கு இல்லை. எங்களுக்குத் தான். துணிவிருந்தும், துணையிருந்தும், சேனை இருந்தும் தோற்றோடிப் போனோமே! திறமையிருந்தும் உரிமையிருந்தும், துரியோதனன் சபையிலே மரம்போல நின்றோமே! எங்கே இருக்கிறது பொறுமைக்குப் பெருமை? எப்படி இருக்கிறது தருமத்தின் வலிமை?

கண்ணன்: சிந்திப்போன பாலைப்பற்றி சிந்திக்கக் கூடாது. இனி, நாம் செய்ய வேண்டியது...

சகா: அந்த அற்பர்களின் கூட்டத்தை அடியோடு ஒழிப்பதுதான்...

கண்ணன்: அல்ல...அது அல்ல... நமக்குரிய நாட்டை

மீண்டும் கேட்பது!

அருச்சு: கொடுக்க மறுத்தால்?...

கண்ணன்: தருமம் அவர்களைத் தண்டிக்கட்டும்.

பீமன்: இல்லை, நான் தண்டிக்கிறேன்! என் கதையை எடுத்து வீசினால், அவர்கள் கதை முடியும். நமது துன்பமும் விடியும்.

கண்ணன்: அது நம்மால் முடியும். ஆனால், தருமம் காக்கப் பட வேண்டாமா? தரணியில் உள்ளவர்கள் நம்மைப் பற்றித் தாறுமாறாகப் பேச இடந் தரலாமா?

சகா: கண்ணா! தருமம் நிலைக்க நீங்களே ஒரு வழி சொல்லுங்கள்.

நகுலன்: உங்களுக்குத்தான் தெரியும். உங்களால் தான் முடியும்.

தருமன்: நமக்குரிய நாட்டைக் கேட்க வேண்டியது தான் தருமம் என்றால், துரியோதனனிடம் சென்று நீங்களே கேட்கலாமே!

கண்ணன்: உங்கள் விருப்பம் அதுவானால், அதைச் செய்ய வேண்டியது என் கடமை. இல்லையா சகோதரி?

பாஞ்சாலி: தூதுப் போகப் போகிறீர்களா?...

சகா: ஆமாம், நம் சார்பாக அனுப்புவோம்.

நகுலன்: தருமத்தைக் காப்போம்... தரணியைக் கேட்போம்... தூதுதானே அதற்கு வழி...

பாஞ்சாலி: தூதா...முன்பு அனுப்பித் தோற்றது போதாதா? முனிவர் பட்ட அவமானம் தீராதா? அன்று விரித்த என் கூந்தலை, என்று முடிப்பேன்? அண்ணா..இது உங்களுக்கே நியாயமாகப் படுகிறா?...

கண்ணன்: கவலைப் படாதேயம்மா...தூதுபோய் மீண்டு வந்து நல்லாய்! உன் கூந்தலை நானே முடிக்கிறேன்.

தருமன்: போய், வெற்றியோடு வாருங்கள்.

அருச்சு: (கேலியாக) கண்ணா! நீங்கள் போவது சரணாகதித் தூதா, இல்லை சமாதானத் தூதா?...

பீமன்: கொசுவை நசுக்கக் குறுந்தடியா?...கோழைகளை வீரர் என எண்ணித் தூது செல்வது...

தருமன்: நமக்குப் பெருமையைத் தரும்... அறம் காத்ததற்காக...

கண்ணன்: ஆமாம் பீமா! மூத்தோர் சொல் என்றும் தேவவாக்கு. போய் வருகிறேன்.

(கண்ணன் போக, அவரையே எல்லோரும் பார்க்கின்றனர்)

-திரை-

காட்சி 3

இடம்: துரியோதனன் சபை.

உள்ளே: துரியோதனன், கண்ணன், கர்ணன், சகுனி, மற்றும் அவையோர்.

(சபையினர் அமர்ந்திருக்கின்றர். கண்ணன் உள்ளே நுழைகிறான். துரியோதனன் இருகை நீட்டி எதிர் சென்று அழைக்கச் செல்ல, சகுனி தடுத்து அமர்கிறான். துரியோதனன் ஆசனத்தில் இருந்தவாறே)

துரியோ: கண்ணா வருக! கார்மேக வண்ணா வருக! (கேலியுடன்)

(கண்ணன் ஆசிர்வாதம் செய்வது போல் கையசைத்துத் தன் இருக்கையில் அமர்கிறான். துரியோதனன் சகுனியைப் பார்க்க, சகுனி கோபமாகத் துரியோதனனைப் பார்க்க, துரியோதனனுக்குக் கோபம் வந்து விடுகிறது)

துரியோ: கண்ணா...வந்த காரியம்?

கண்ணன்: நேரடியான கேள்வி, நேர்மையான கேள்வி... தூது வந்தேன்.

சகுனி, கர்ணன்: (இருவரும்) என்ன?

கண்ணன்: ஆமாம்--சூதாடித் தோற்று, ஆதரவிழந்து,

வேதனைக்கு ஆளாகி, நாடிழந்து போனவர்களுக்கு, நாடு கேட்க வந்தேன்.

துரியோ: பிறகு...

கண்ணன்: சொன்ன சொல்லைக் காப்பாற்றிய மன்னன் என்று பாரெல்லாம் உன்னைப் பாராட்ட, உன் பெருந்தன்மை எல்லோருக்கும் வழிகாட்ட, நீ வாழ வேண்டும் என்று சொல்லவந்தேன்.

சகுனி: சொல்ல வந்தாயா...இல்லை...பொய் பேசி வெல்ல வந்தாயா? தோற்றோடிப் போனவர்கள் தூதுவிட்டு அரசனை ஏமாற்றப் பார்க்கிறார்களா?...

கண்ணன்: தூதுக்கு அப்படியா அர்த்தம்...

துரியோ: எப்படிஇருந்தால் என்ன? எல்லா நாடும் எனக்குச் சொந்தமானது. இதில் அவர்களுக்கு பங்கேது, பாகமேது?

கண்ணன்: அது, அவர்களின் உரிமை.

துரியோ: அப்படிக் கேட்பது மடமை...

கண்ணன்: அது அவர்களின் சொத்து...

துரியோ: அது, இன்று என்னுடைய பற்று. இதைக் கேட்கும் தூதுவரே! நீர் வெறுத்தாலும் சரி, இந்தச் சபையே, திகைத்தாலும் சரி, ஏழுலகும் என்னைப் பகைத்தாலும் சரி, ஒரு ஈ உட்காரும் அளவுக்குக் கூட அவர்களுக்கு இல்லை...

கண்ணன்: துரியோதனா! எத்தனை பெரிய மனது உனக்கு? இரக்க சிந்தை வேண்டாமா? கொடி கட்டி ஆண்டவர்கள், கோபுரம் போல் வாழ்ந்தவர்கள், இன்று நாட்டின் கோடியிலே நிற்கின்றார்கள். அவர் கேட்பது--ஆள நாடு வேண்டாம்...ஐந்து நகர்...

துரியோ: நகரா...அது நகராது.

கண்ணன்: நகர வேண்டாம். ஊரலாமே...ஐந்து ஊராவது!

கர்ணன்: யார் தருவார் ஊர்? பேசாமல் போய் எங்கே யாவது சத்திரம் சாவடியில் தங்கச் சொல்லுங்கள். இந்த நாட்டை ஆள வேண்டியவர்கள் வீரர்கள்; கோழைகள் அல்ல.

கண்ணன்: வீண்பேச்சு வேதனையைத் தரும். சொற்களைக் கொட்டி விட்டால், பிறகு அள்ளிக் கட்ட முடியாது. மன்னா, ஊரும் வேண்டாம், அவர்கள் தங்கி வாழ ஐந்து வீடாவது?...

சகுனி: வீடா?...காட்டில் ஒரே வீட்டில் வசித்தவர்களுக்கு 5 வீடு எதற்கு? ஐயோ ஐயோ! (கேலியாக) இப்படிப் பிச்சை கேட்கலாமா? கேவலம!

துரியோ: மாமா... அவர்கள் அப்படிப்பட்டவர்கள் தான்...

கண்ணன்: துரியோதனா! நா அடக்கம் வேண்டும். நல்லவர்களை ஏசுவதை நாடு பொறுக்காது. நீ நடந்து கொள்ளும் முறை, பேசும் பேச்சு எல்லாம் போரை விரும்புகிறாய் என்பதையே காட்டுகிறது.

துரியோ: உம் யூகம் அப்படிக் கூறுகிறதோ...அரிய கண்டு பிடிப்பு...தூதுவரே...கேளும்...உம் யூகம் சரிதான்.

கண்ணன்: போர் வேண்டுமென்றால், கையிலடித்துக் கூறி விடு.

துரியோ: (பொங்கியெழுந்து) என்ன அகந்தை உனக்கு? ஆயர் குடியிலே வளர்ந்த தோஷமா? கையடித்துச் சொல்லவேண்டுமா? என் சபையிலே, என் முன்னாலே, என்னையே பொய்யனாக்கத் துணிந்த பேதையே! போரென்றால் பயந்தோடிப் பதுங்கும் பேடியல்ல நான்! புலிக்குப் பிறந்தவன்-- தெரிகிறதா?

கோழைகளுக்கு வீரம் இப்பொழுதுதான் கொப்புளித்துகத் கொண்டு வருகிறதாம்! அதற்குப் பல தூதுவராம். போ... ஆண்மையிருந்தால், போர்க்களத்திலே சந்திக்கச் சொல்! இதுதான் என் உறுதியான, இறுதியான முடிவென்று சொல்...போர்... போர்... (கர்ஜிக்கிறான்)

-திரை-

காட்சி 4

இடம்: போர்க்களக் காட்சி.

உள்ளே: கண்ணன், அருச்சுனன்.

(தேரை விட்டு இறங்கி வந்த அருச்சுனன் திகைப்புடன் நிற்கிறான். எதிரே இருக்கின்ற காட்சியைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விடுகிறான். கண்ணன் அவனைக் கவனித்துவிட்டு, பேச ஆரம்பிக்கிறான்.)

கண்ணன்: அர்ஜுனா! அதோ பார்! ஆயிரம் ஆயிரம் படைகள் அணிவகுத்து நிற்கும் காட்சியைப் பார். அநீதியை அழித்து, நீதியை வாழவைக்க வந்து நிற்கும் வீரர்களைப் பார். விவேகிகளைப் பார். அவர்கள் எல்லாம் தருமத்தைக் காக்கவந்த தயாநிதிகள்.

எதிரிலே பார்!... ஆணவத்தால் அறிவிழந்து, அகந்தை தலைக்கேறிய தற்பெருமை பிடித்தவர்கள்... பாசத்தால் அவர்களுக்குத் துணை போகின்ற பண்பாளர்கள். அவர்களை நாம் இன்று வென்றாக வேண்டும். அறத்தினை கொண்டாட வேண்டும்.

என்ன அர்ஜுனா! நான் சொல்லிக் கொண்டே போகிறேன். உன் முகத்திலே சோகம் படரக் காரணம்?

அருச்சு: இருக்கிறது...எதிரிலே நிற்பவர்கள் அத்தனை பேரும் பகைவர்கள் அல்லவே. அவர்கள் எல்லாம் எனக்குச் சொந்தக்காரர்கள்!

கண்ணன்: உனக்கல்ல...அதர்மத்திற்கும் அக்ரமத்திற்கும் சொந்தக்காரர்கள். மனிதப் பண்பாட்டின் விரோதிகள். மனித குலத்தின் பகைவர்கள்.

அருச்சு: ஆயிரமே இருந்தாலும், உறவை அழிப்பது தருமமா?

கண்ணன்: அப்படிக் கேள், எது தருமம்? எதுஅதர்மம்? எது நீதி! எது அநீதி! இன்று இது புரிந்து விட்டால், உன் குழப்பம் போகும்; சோகம் பறக்கும்; விவேகம் பிறக்கும்; வீரம் ஆர்ப்பரிக்கும்.

அருச்சு: கண்ணா! அதோ நிற்கிறாரே...அவர் என் குரு! அதோ அவர் என் பாட்டனார். இவர்கள் எல்லாம் என்னுடன் உயிருக்குயிராகப் பழகிய நண்பர்கள். இவர்களைக் கொன்று, நான் தீராத பழியையும் பாவத்தையும்-சுமக்க வேண்டுமா?...

கண்ணன்: எய்தவன் இருக்க யாராவது அம்பை நோவார்களா?... அழிப்பது நீ! அழிக்கச் செய்பவன் நான்!! உன்னை எப்படி பழியும் பாவமும் சேரும்?

அருச்சு: செய்பவனைத்தானே பாவமும் புண்ணியமும் சேரும் என்கிறார்கள்?

கண்ணன்: கடமையைச் செய்ய வேண்டியவன் மனிதன். அதற்கான பலனைக் கொடுப்பவன் இறைவன். ஆதலால், கடவுள் இட்ட பணி என்று உன் கடமையைச் செய்...

அருச்சு: கண்ணா! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

கண்ணன்: கலங்கிய நீரில்தான் தெளிவைக் காண முடியும். குழப்பம் தெளிவுக்கு அறிகுறி. ஐயம் அறிவுக்கு முன்னோடி. அர்ஜுனா! கவனமாகக் கேள்.

மன்னனும் நானே! மக்களும் நானே! இந்த உலகமும் நானே! உயிர்களும் நானே!...

அழிந்து போவது உடல்...அழியாது இருப்பது புகழ்!

கலைந்து போவது உறவு...கலையாது வாழ்வது அறிவு!

உலகைக் காப்பது நீதி!

உண்மையை அழிப்பது அநீதி!

இவையெல்லாம் காலங் காலமாய் நடந்து வருவன. உலகத்தை அழியாமல் காத்து வருவன...

அருச்சு: அப்படியென்றால்...

கண்ணன்: என்னை நம்பு. எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிடு. ஆண்மையுள்ள உன்னிடம் அழிக்கும் சக்தியைத் தந்திருக்கிறேன்.

சிந்திக்காமல் செயல் படு...

எடு வில்லை! ஏற்று நாணை!

அருச்சு: ஆகட்டும் கண்ணா! (வில்லை எடுத்து நாணேற்றுகிறான்) போகட்டும் என் அம்பு. பாயட்டும் பகைவர் மேல்., ஒழியட்டும் அவர்களின் வெறியாட்டம்.

கண்ணன்: ஆம் அர்ஜுனா. அழியப் போகிறது அதர்மம். இனித்தான் தரும ஆட்சி நடைபெறப் போகிறது.

வாழ்க தர்மம்...வளர்க பாரதம்.



நல்ல நாடகங்கள்
டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா
D.Litt; D.Ed; FUWAI